Registered at the G. P. O as a Newspaper

வாரப்பதிப்பு

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம். பிலவ தை 15 ஆம் நாள் ஷஃபான் 21 (28-1-62) ஞாயிற்றுக்கிழமை இதழ் 299

பட்டுப் பருத்திப்
பிடவைகளுக்குச்
சிறந்த ஸ்தாபனம்
டயறும்ஸ்
மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# 'ஸ்ரீ' பற்றி கோர்ட்டில் விளக்கம்



## இலக்கிய ஆர்வம்

ஈழநாட்டிலே தமிழ் இலக்கியத் துறையில் இன்று ஒரு புதிய உற்சாகம் ஏற்பட்டு வருவதை நன்கு உணர முடிகின்றது. இப் புத்துணர்ச்சி எழுத்தாளர்களை ஆர்வத்துடன் உழைக்கத் தூண்டியிருப்பது ஒரு சுப சகுனமாகும்.

பிரபல எழுத்தாளர்கள் சிலரின் படைப்புக்கள் இன்று புத்தக உருவில் வெளியாகி வருவதையே இங்கு மகிழ்ச்சியுடன குறிப்பிடுகின்றோம். கட்டுரை, சிறுகதை, கவிதை, கிராமிய இலக்கியம், கலை, ஆராய்ச்சி ஆகிய பல துறைகளிலும் ஈழத்து எழுத்தாளர்கள் இன்று மிகுந்த ஆர்வத்துடன் உழைத்து வருவதோடு நில்லாது தங்கள் படைப்புக்களைப் புத்தக உருவில் வெளியிடுவதற்கும் போதியளவு துணிச்சல் பெற்றிருக்கின்றனர்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களிடையேயும் சமீப காலத்தில் இந்த விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. எதிர்கால இலக்கிய வளர்ச்சி இவர்களின் சிந்தனை வளத்திலும் தங்கியிருககின்றது. பேராதனைப் பல்கலைக் கழகப் பூங்காவில் மலர்ந்து மணங் கமழும் பன்னிரு சிறு கதைகளின் தொகுப்பும் இந்த இலக்கியப் புத்துணர்ச்சியின் பேறேயாகும்.

'மத்தாப்பு' என்ற குறுநாவலும் 'மேடும் பள்ளமும்' என்ற சிறு கதைத் தொகுதியும் ஈழநாட்டுக்குப் பெருமை தருவனவாகவேயுள்ளன. இத்தேசிய விழிப்புணர்ச்சி ஆக்கமுறுவதற்கு வாசகர்களின் ஆதரவு தாராள்மாகக் கிடைக்குமாயின் புதிய இலக்கிய முயற்சிகள் ஈழநாட்டில் வெற்றியுற அதிக வாய்ப்பு ஏற்படும்

## சிங்களத்தில் 'ஸ்ரீ' இல்லையென சாட்சியம்

## தமிழ் 'ஸ்ரீ' வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு

**தமிழ் 'ஸ்ரீ' வழக்கு நேற்று மீண்டும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது 'ஸ்ரீ' என்ற எழுத்து எந்தமொழியிலிருந்து தோன்றியது. அந்த எழுத்தில் பொருள், அதன் உச்சரிப்பு ஆகியவைகள் பற்றி திரு. பாலசுந்தரக் குருக்கள தமது சாட்சியத்தில் விளக்கிக் கூறினர்.**

*நீர்கொழும்பைச் சேர்ந்த பெர்னண்டோ என்பவர் சாட்சியமளிக்கையில் சிங்களத்தில் "சிறி" என்ற எழுத்தே இல்லையென்று கூறினர்.*

மோட்டார் கார் இலக்கத் தகட்டிலிருந்த சிங்கள 'சிறி' எழுத்தைஅழித்துவிட்டு அதற்குப்பதிலாக தமிழ்'சிறி' எழுத்தை எழுதியதாகவும் இதன் மூலம் மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 24-வது பிரிவின் 2-வது விதியை மீறியதாகவும் குற்றஞ்சாட்டி பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்தின் கார்ச்சாரதி கந்தசாமி வேலும்மயிலும் மீது தொடரப்பட்டுள்ள இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துச்கொள்ளப் பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ரஞ்சித் அபயசூரியா பிராசிக்கியூஷன் தரப்பில ஆஜரானர்.

திருவாளர்கள் எஸ். நடராஜா, ஆர். விசுவநாதன், வி.நடராஜா ஆகியோரின் அனுசரணையுடன் • திருவாளர்கள் எம். திருச்செல்வம் கியு. ஸி., எம். சிவசிதம்பரம், ஏ. அமிர்தலிங்கம், எஸ். தேவராஜா, கே. வி. எஸ். சண்முகநாதன், எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் எதிரியின் சார்பில் ஆஜரானர்.

இந்த வழக்கு விசாரணையை பார்ப்பதற்காக பெருந்தொகையான மக்கள் நீதி மன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்தனர். பட்டிருப்பு எம். பி திரு. எஸ். எம். ராசமாணிக்கம், செனட்டர் எம். மாணிக்கம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் எம். பி., திரு. வி. தர்மலிங்கம், எம். பி., திரு. கே. துரைரத்தினம் எம். பி ஆகியோரும் நீதிமன்றத்தில் வழக்குவிசாரணையைப் பார்ப்பதற்காக வந்திருந்தனர்.

### குற்றமிளைக்கப் படவில்லை

மோட்டார் கார் இலக்கத் தகட்டில் கொடுக்கப்பட்டுள்ள 'சிறி'; சட்டத்தில் கோரப்பட்டுள்ள ஒரு எழுத்தோ அல்லது எழுத்துக்களைக் கொண்டதோ அல்லவென்றும் அது ஒருஎழுத்தின் சேர்க்கையும் அடையாளமுமாகுமென்றும் எனவே குற்றமிளைக்கப்படவில்லை என்றும் திரு. என். திருச்செல்வம் எதிரியின்சார்பில் வாதாடுகையில் குறிப்பிட்டார்.

'வாகனத்தின் பதிவுத் தஸ்தாவேஜுகள் வாகனத்தின் அமைப்புச்சட்ட இலக்கத்திலும், தொடர் பிலக்கத்திலும் வித்தியாசம் காட்டுகின்றது. காரின் அமைப்பையும் வேறுபாட்டையும் குறிக்கும் காரின் அமைப்புச் சட்ட இலக்கத்துக்கும் இந்தக் குற்றச் சாட்டுக்கும் தொடர்பில்லை. ஒரு இலக்கத் தகடு மோசடி முறையில் காரில் பொருத்தப்பட்டிருக்கலாம். எனவே, தனித்தன்மை கூட நிரூபிக்கப்படவில்லை" என்று திரு. திருச்செல்வம் கூறினர்.

சமஸ்கிருதம், தமிழ், பாளி, ஆங்கிலம்,லத்தீன் ஆகியமொழிகளில் பாண்டித்தியம் பெற்றவரும், ஸ்கந்தவரோதய கல்லூரியில் தற்போது விசேஷஆசிரியராகக் கடமையாற்றுபவருமான திரு. கே, பாலசுந்தரக் குருக்கள் எதிரிதரப்பில் சாட்

(7-ம் பக்கம் பார்க்க)

## உள்ளே......

★ ஈழ்ப்பாட்டனின் கடிதங்கள்
★ இலக்கியச் சோலை
★ சிறுகதை
★ உலக மேடை
★ மனிதனும் மனிதனும்
★ உங்கள் இராசி பலன்

# வான வெளியில் அமெரிக்க ராக்கட் சந்திரனை படம் பிடிக்கும்

கேப்கனவரோல், ஜன. 27

நேற்றிரவு அமெரிக்கா சந்திரனை மிகச் சமீபத்திலிருந்து படம் பிடிக்கும் கருவியை அனுப்பியது. 100அடி நீளமான ராக்கெட்டுடன் சென்ற அது மணிக்கு 18000 மைல் வேகத்தில் சென்றது. ராக்கெட் அனுப்பப்படும்போது பூமிக்கும் சந்திரனுக்குமிடையே இருந்த தூரம் 2, 36, 924மைல்களாகும். சந்திரனை அடைய 66மணி நேரம் பிடிக்குமென்றும், சந்திரனில் விஞ்ஞானக் கருவிகளையும் அது இறக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

## இலங்கைவந்த செக்கோஷ்டி

கொழும்பு, சனி

ஒரு எழுத்தாளர், ஒரு பாடசாலை அதிபர், ஒரு விவசாய நிபுணர் ஆகியோரடங்கிய செக்கோஸ்லோவேகிய தூது கோஷ்டி ஒன்று, இன்று இலங்கை வந்தது. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் வந்துள்ள இத்தூது கோஷ்டி, இலங்கையின் பல விடங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்யும்.

## அல்ஜீரியாவில் 6 பேர் பலி

அல்ஜியர்ஸ் ஜன 27

அல்ஜீரிய கைகலப்பில் நேற்று 6 பேர் கொல்லப்பட்டனர்.

# எண்ணை ஊழியர் தகராறு எச்சமயமும் முடியும்

## சமரச உடன்பாடு ஏற்பட்டுள்ளது

## டாக்டர் என். எம். தகவல்

கொழும்பு, சனி

எண்ணைக்கம்பனி ஊழியர்களின் வேலை நிறுத்தம் எந்த நேரமும் முடிவடையலாம் என்று டாக்டர் என். எம். பெரேரா இன்று தெரிவித்தார்.

ஸ்டான்வாக் எண்ணைக் கம்பெனிக்கும் எண்ணை ஊழியர்கள் யூனியனுக்குமிடையிலுள்ள தகராறுகள் சம்பந்தமாக சமரசப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும், பேச்சுவார்த்தைகள் ஒரு சமரசமுடிவை அடையும் கட்டத்தை அடந்துள்ளதாகவும், 'ஸ்டான்வாங்' எண்ணைக்கம்பனியைச் சேர்ந்த திரு. ஏ. ஜி நெவ்தெரிவித்தார்.

சில முக்கிய பிரச்சினைகளில் குறிப்பாக போனஸ்விவகாரம், குமாஸ்தாக்களின் சம்பள உயர்வு ஆகியவைகளில் அநேகமாக ஒரு உடன்பாடு ஏற்பட்டுவிட்டதென்றும் எல்லாம் சரியாக நடைபெற்ருல் 'ஸ்டான்வாக்' கம்பனியாருடன் எந்தச் சமயத்திலும் நாம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடக் கூடுமென்றும் டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்தார்.

ஒப்பந்தம்கைச்சாத்தானதும் கைத்தொழில் சமரச ஒப்பந்தம் என்று அதைக் 'கஸட்' அறிக்கையில்பிரசுரிக்கும்படி தொழிற் கமிஷனரைக் கேட்டுக்கொள் எப்போவதாகவும் டாக்டர் என். எம். பெரோரா கூறினர்

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

பிலவ ஆண்டு தை மாதம் 8-ந் திகதி முதல் 14-ந் திகதி வரை ( 1962 ஜனவரி 21 முதல்27 வரை ) உள்ள பலன்கள்

## மேட இராசி

(அசுவதி, பரணி, கார்த்திகை முதற்பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பிதாவழி உறவில் சில கஷ்டங்கள் நேரிட இடமுண்டாகிறது. புண்ணிய விஷயங்களிலும் தெய்வவழிபாட்டிலும் மனம் ஈடுபடும். செவ்வாய் உச்சமேறி நிற்பதனல் தொழில் வகையில் செல்வாக்கும் சமூகத்தில் மதிப்புயர்ச்சியும் செய்தொழில் வெற்றியும் காணப்படும். தொழிலபிவிருத்திக்கான வழிவகைகள் காணப்படுவதுடன் பணவரவும் இருக்கும். குடும்ப சந்தோஷம், ஒற்றுமை, குழந்தைகளுக்கு நலன்கள் பெருகுதலும் இருக்கும். பொதுவாக நற்பலன் அதிகமாக இருக்கும். பணச் செலவும் கூடவே காணப்படுகின்றது. உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு எதிர்ப்புக்கள் தோன்றக்கூடுமாயினும் அவை இடர்விளைக்க மாட்டா. பெண்களுக்கு நன்மையான பலன்கள் காணப்படுகின்றன. சங்கீதம் முதலிய கலைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மதிப்பு வளரும். இவ்விராசியாளருக்கு 15ந் தேதியும் (ஜனவரி 28) 21ந் தேதியும் (பிப்ரவரி) நற்பலன் தரும் சுபதினங்களாகும். இதர தினங்கள் அசுபதினங்களாகும்.

★

## இடபஇராசி

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தெய்வ வழிபாடும் தார்மீக சிந்தனைகளும் முதியோரிடமும் பெரியவர்களிடமும் மதிப்பாகவும் அன்பாகவும் நடத்தலும், பிதிர்வழி உதவிகளும் குடும்ப சந்தோஷமும் மங்களகரமான சம்பவங்கள் நடத்தற்கான செயல்கள் நடத்தலும் காணப்படுகின்றன. இடையிடையே கடும் உழைப்பும் பணச் செலவும் ஏற்படும். உத்தியோகத் துறையிலிருப்பவர்களுக்கு இவ்வாரத்திய கிரக சேர்க்கையின் பலன்கள் சற்றுமந்தமாகவே இருக்கும். வர்த்தகத் துறையினருக்கு செய்தொழில்கள் இலாபந் தருவனவாகவும் தொழில் அபிவிருத்திக்கு ஏற்ற செயல்களை கையாளக்கூடியதாகவும் புதிய துறைகளில் முயற்சிகளைப் பெருக்குவதற்குரிய காலமாகவும் இவ்வாரம் தெரிகின்றது. பெண்களுக்கு குடும்பத்தில் நன்மைகளும் கணவர், குழந்தைகள், பிதா மாதாக்களுக்கு செல்வச் செழிப்புகளேற்படுதலும் மகிழ்ச்சியான செயல்கள் நடத்தலும் காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 15, 17, 18 (ஜனவரி 28, 30, 31) ஆகிய தினங்கள் சுப தினங்களாகவும் இதர தினங்கள் அசுபதினங்களாகவும் இருக்கும்.

★

## மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் ஏழு கிரகங்கள் அட்டமத்தானமாய மகரத்தில் கூடிநிற்பது அத்தனை விசேடமன்று. ஆயினும், சனியும் செவ்வாயும் ஓரளவு கெடுதலைச்செய்ய இடமில்லையானதாலும் மற்றவர்கள் பாரிய கஷ்டங்களைத் தரக்கூடியவர்களாக இல்லாததினலும் பயப்படத் தேவையில்லை. உத்தியோகத் துறையினருக்கு தொழிற் கஷ்டங்களும் நோய் துன்பங்களும் காணப்படும். வர்த்தகத் துறையினருக்கு தொழிலில் பணம் முடங்கி, கஷ்டங்களும் தொழிற் கணக்கமும் கடன் சம்பந்தமாக நீதிமன்றங்களை நாடிச்செல்லநேர்தலும் காணப்படும். பெண்களுக்கு பொதுவாக குடும்ப நலம், தேகாரோக்கியம், நிம்மதி ஆகியன காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 18 (ஜனவரி 31), 19, 20 (பெப்ரவரி 1, 2) சுப தினங்களாகும். இதரநாட்கள் அசுப பலன்களையே தரும்.

★

## கடக இராசி

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தமது சொந்த நிலைமையில் கஷ்டங்கள் காணப்படுகின்றன. தமது அவசரப் பேச்சுக்களாலும் பிடிவாதக் குணங்களாலும் கஷ்டங்களைத் தேடிக்கொள்வர். குடும்பத்தில் நோய் துன்பங்கள் அடிக்கடி ஏற்படும். ஆயினும் ஓரளவிற்கு நன்மைகளும் கலந்திருக்க இடமுண்டு. உத்தியோகத் துறையினருக்கு தமது தொழிலகங்களில் இடையிடை சச்சரவுகள், மறைமுக எதிர்ப்புக்கள் ஆகியன இருக்கின்றன. வர்த்தகத் துறையில் ஈடுபட்டோருக்கு உழைப்புக்குத்தக்க ஊதியம் கிடைக்கும். பெண்களுக்கு இவ்வாரத்தில் குடும்பச் சச்சரவுகள், நோய் துன்பங்கள், வைத்தியச் செலவுகளதிகரித்தல், பணக் கஷ்டம் ஆதியனவும் காதல் விவகாரங்களில் ஈடுபட்டோருக்கு ஏமாற்றங்களும் காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 16 (ஜனவரி 29), 21 (பெப்ரவரி 3) சுபதினங்களாகவும் இதரநாட்கள் அசுப தினங்களாகவும் இருக்கும்.

★

## சிங்க இராசி

(மகம், பூரம், உத்திரம் முதலாம்பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கிரகங்கள் மகரத்தில் எழுவர் கூடியிருப்பதால் ஓரளவு நிம்மதி காணப்படும். பழைய நிலைகள்மாறி சாதகமான சூழ்நிலை ஏற்படும். மனத்தைரியம், சிந்தனைத் தெளிவு, அதிகாரிகள், உறவினர், நண்பர் ஆதரவு, பல இடங்களிலும் உதவிகள் கிடைத்தல், தேகாரோக்கியம், செலவினங்கள் குறைதல், பணவரவு, சமூக மதிப்புயர்தல் ஆதியன காணப்படுகின்றன. இடையிடையே இவ்வாரத்தில் குடும்பத்தில் ரோகங்கள் ஏற்பட இடமுண்டு. நற்பலன் கூடுதலாக இருக்கும். உத்தியோகத் துறையினருக்கு தொழிலில் செல்வாக்கு அதிகரிக்கும். வசதியான வழியில் உத்தியோக இடமாற்றம் ஏற்படலாம். வர்த்தகத் துறையினருக்கு போட்டிகள் அதிகரிக்கும். வர்த்தகத்துறையில் ஈடுபட்டவர்கள் இவ்வாரத்தில் சிறிது கவனமாக நடப்பது நன்று. பெண்களுக்கு குடும்பத்தில் சச்சரவுகள், நோய் துன்பங்களும் கடன் உபாதைகளும் அதிகரித்தல், சுபகருமங்கள் தடைப்படல், ஏமாற்றம் ஆகியன காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 16 (ஜனவரி 29), 21 (பெப்ரவரி 3) தேதிகள் சுபநாட்களாகவும் இதர தினங்கள் அசுப நாட்களாகவும் இருக்கும்.

★

## கன்னி இராசி

(உத்திரம் பின்முக்கால், அத்தம், சித்திரைமுன்னரைமுடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் யோசனைத்தெளிவு, நற்குணவான்கள் தொடர்பு, இலாபகரமான தொழில் வளர்ச்சி, பணவிவகாரங்கள் சாதகமாக முடிதல், தெய்வ வழிபாடு, தார்மீக சிந்தனை, சுபகருமங்களில் முயற்சிகள், கல்வி சம்பந்தமாக ஊக்கம், தேக கஷ்டம் ஆகியன காணப்படுகின்றன. கடும் உழைப்பும் காணப்படும். கிரகங்களில் ஏழுபேர் இப்பொழுது மகரத்தில் இருப்பதால் நற்பலன் கூடுதலாக இருக்கும். வர்த்தகத் துறையினருக்கு செய்தொழில்கள் விருத்தி, நண்பர், உறவினர், ஊழியர் ஆதரவு வகையால் இலாபம் ஆதியன காணப்படுகின்றன. பெண்களுக்கு மகிழ்ச்சிகரமான வாழ்க்கையும் மாதுருவழியில் ஆதரவும் காணப்படும். கன்னியருக்கு விவாகப்பேறுகளுக்கும் இடமுண்டாகும். இவ்விராசியாளருக்கு 18 (ஜனவரி 31) தேதி சுபதினமாகும். இதர நாட்கள் அசுபதினங்களாகும்.

★

## துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி விசாகம் முன் முக்கால் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சிறிது கஷ்டமான பலன்கள் நடக்க இடமேற்படுகின்றது. அவசரப்பேச்சும் பிடிவாதமான குணமும் அனாவசிய வம்புகளைத் தேடிக்கொள்வதும் காணப்படுகின்றன. நிதானமாகவும் பொறுமையாகவும் நடக்காதுவிட்டால் வழக்குகளிலும் ஈடுபட நேரும். உத்தியோகத்துறையினருக்கு உழைப்புக் கடுமையாகவும் பலிதம் குறைவாகவும் இருப்பதுடன் மேலதிகாரிகளைத் திருப்திசெய்ய முடியாமை, பிரயாணக் கஷ்டங்கள், பணச்செலவு ஆகியனவும் காணப்படுகின்றன. வர்த்தகத் துறையினருக்கு வருமான அதிகரிப்பும் செய்தொழில் அபிவிருத்திகளும் புதியன முயற்சிப்பதில் ஊக்கமும் இவ்வாரம் காணப்படுகின்றன. கல்வி பயில்வோருக்கு ஞாபகசக்தி, கல்வி மேன்மை, ஊக்கம், மாதுருவழி உதவி ஆகியன காணப்படும். பெண்களுக்கு தேகாரோக்கியம், குடும்பச்சீர், குழந்தைகளுக்கு நன்மைகளாதியன காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 16 (ஜனவரி 18), 19, 20, 21 (பெப்ரவரி 1, 2, 3) ஆகிய நாட்கள் சுபதினங்களாகும். இதரநாட்கள் அசுப பலன் தருவன.

★

## விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் வருமானமதிகரிப்பு, தொழில் ஊக்கம், உற்சாகம், அதிகாரிகள் ஆதரவு, இடையிடை மனவருத்தச் சம்பவங்கள் நடத்தல் ஆகியன காணப்படும். கல்வி, தொழில், நற்கருமம் ஆகியன சம்பந்தமாக பணச் செலவுக்கும் இடமுண்டாகும். அலைச்சலும் இருக்கும். இவ்வாரம் நற்பலன் கூடுதலாகவும் தீப்பலன் குறைவாகவும் இருப்பதால் இவர்களுக்கு நல்ல வாழ்வு அமையும். உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு உண்டு. பெண்களுக்கு சுபகாலமும் அவர்களது கணவருக்கு பலவிதநன்மைப் பேறுகள் கிட்டுதலும் காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 17 (ஜனவரி 30), 21 (பெப்ரவரி 3)ந் தேதிகள் சுபதினங்களாகும். இதர தினங்கள் அசுபபலன் தருவன.

★

## தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பணச்செலவதிகரிக்கும். நற்பலன் சிறிது குறைவாகவும் தீப்பலன் கூடுதலாகவும் இருக்கும். பொறுமை அவசியம். உத்தியோகத்துறையினருக்கு அவசரப் பேச்சு, பிடிவாத குணம் ஆகியனவற்றை ஒதுக்கி நிதானமும் பொறுமையும் கடைப்பிடிப்பின் மேலோர் அதிருப்தியை சம்பாதிப்பதினின்றும் தவிர்க்க முடியும். வர்த்தகத்துறையினருக்கு நாணய விருத்தி அதிகரிக்கும் பெண்களுக்கு குடும்ப சௌக்கியமும் சகல பாக்கியாபிவிருத்திகளும் ஏற்படும். இவ்விராசியாளருக்கு 16 (ஜனவரி 29), 19, 20 (பெப்ரவரி 1, 2) ஆகிய தினங்கள் சுப பலன்களையும் இதர நாட்கள் அசுப பலன்களையும் தரும்.

★

## மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மனத்தில் ஒருவித பயமும் வீண் பிராந்திகளும் ஏற்படும். பொதுவாக இருவித பலன்களும் கலந்து நடக்கும். நிதானம் அவசியம். உத்தியோகத்துறையினருக்கு மாற்றம் தடைப்படுவதுடன் தொழிலகத்தில் ஊழியர், பணியாளர் எதிர்ப்புக்களையும் சமாளிக்க நேரும். வர்த்தகத்துறையினருக்கு தொழிலபிவிருத்தியும் வருமானமும் எதிர்ப்பு மறைதலும் காணப்படுகின்றன. பெண்களுக்கு இவ்வாரத்தில் சிந்தனைத் தெளிவு, நன்மைப்பேறுகள், பணநிலைமையில் சௌகரியம் ஆகியன காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 15, 17, 18 (ஜனவரி 28, 30, 31), 21 (பெப்ரவரி 3) ஆகிய தினங்கள் சுப தினங்களாகும். இதர நாட்கள் அசுபதினங்களாகும்.

★

## கும்பராசி

(அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பொதுவாக கஷ்ட பலன்களே காணப்படுகின்றன. கரைச்சல், அகால போசனம் ஆதியன காணப்படுகின்றன. ஓரளவுக்கு மனத்துணிவு இவர்களுக்கு இருக்குமாகையால் இக் கஷ்டங்களைச் சமாளித்துச் செல்ல உதவும். உத்தியோகத் துறையினருக்கு அதிக பொறுப்புக்களும் கடுமையான உழைப்பும் இருக்கும். வர்த்தகத்திலுள்ளவர்களுக்கு தொழிலில் போட்டிகளும் பணநட்டமும் ஆதாயத் தடைகளும் கடன் பயமும் இருக்கும். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கணவருக்கும் நன்மைகள் இருக்கும். பணச் செலவும் இருக்கும். இவ்விராசியாளருக்கு 17, 18 (ஜனவரி 30, 31), 20 (பிப்ரவரி 2)ந் தேதிகள் சுபதினங்களாகவும் இதர தினங்கள் அசுப பலன் தருவனவாகவும் இருக்கும்.

★

## மீன இராசி

(பூரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் விசேட பலன்களுக்கு இடமுண்டாகும். பல துறைகளிலும் வருமான அதிகரிப்பும் தொழிலபிவிருத்தியும் புதியன ஆரம்பித்தலும் பலவித சொத்துக்கள் சேருதலும் இருக்கும். குடும்பத்திலே மகிழ்ச்சி, கடன் பயம் நீங்கி நிம்மதியும் நாணயவிருத்தியும் சுகபிரயாணங்களும் குடும்பத்தில் சீர் சிறப்புக்களும் காணப்படுகின்றன. இப்பொழுது மகரத்தில் கூடியுள்ள கிரக கூடம் இவர்களுக்கு நல்ல யோக பலனைத் தருவதாகும். உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு உயர்வும் நற்பெயரும் வருமான அதிகரிப்

(5-ம் பக்கம் பார்க்க)

## இவர்கள் பெரியவர்கள்

ருஷ்யப் புரட்சியின் தந்தையான லெனினுக்கு ஒரு முறை கடும் சுகவீனம் ஏற்பட்டது. டாக்டர்கள் விலைமதிப்புள்ள ஒரு மருந்தைச் சாப்பிடுமாறு அவருக்குக் கொடுத்தனர். அப்போது லெனின் அதைக் கையில் எடுத்துக்கொண்டு "இந்த மருந்து என்போல் சுகவீனமுற்றிருக்கும் சாதாரண பிரஜைகளுக்குக் கிடைக்குமா" என்று கேட்டார். தோழர் லெனின் அவர்களே, அதெப்படி முடியும்? இவ்வளவு அரிதான மருந்து உங்களைப்போல் நாட்டுக்கு அரிதாகக்கிடைத்திருப்பவருக்கு மட்டுமே கிடைக்கும்'' என்றனர் டாக்டர்கள். "அப்படியானல் இது எனக்கு வேண்டியதில்லை. நானும் பாமரர்களில் ஒருவன் தான்" என்று கூறி மருந்தைச் சாப்பிட அவர் மறுத்துவிட்டார். டாக்டர்கள் யோசித்தனர். தலைவரோ பிடிவாதமாக மறுத்துவிட்டார். ஸ்ரீமதி லெனினைப் பிடித்தார்கள். வாழைப்பழத்துக்குள் வைத்து சாப்பாட்டு நேரத்தின்போது மருந்தை அவர் கணவருக்குக் கொடுத்துவிட்டார். இதனல் லெனின் சுகவீனத்திலிருந்து மீண்டார்.

*

ஒருமுறை, புகழ்பெற்ற அமெரிக்க ஜனதிபதி ஆபிரகாம் லிங்கன் தம் சப்பாத்துக்களைத் துடைத்துக்கொண்டிருந்தார். செல்வந்தரான அவரது நண்பர் ஒருவர் அப்போது லிங்கனைப் பார்க்கும்பொருட்டு அவர் அறைக்குள் நுழைந்தார். உடனே வியப்புடன் "என்ன லிங்கன், உங்கள் சப்பாத்துக்களை நீங்களே தான் துடைப்பதுண்டா" என்று கேட்டார். அதற்கு லிங்கன், "ஆமாம் நீங்கள் யாருடைய சப்பாத்தைத் துடைக்கிறீர்கள் என்று கேட்டார் சாவதானமாக. நண்பர் முகத்தில் ஈயாடவில்லை.

*

காந்திஜி வகுப்புக்கலவரத்தினல் பாதிக்கப்பட்டிருந்த நவகாளியில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். வங்காளத்தில் மூங்கில்களினல் ஆன சிறிய பாலங்கள் அதிகம். காந்திஜி இவற்றில் தடி ஊன்றுமலே நடந்து பழகியிருந்தார். அப்போது இடைக்கால அரசாங்கத்தின் உதவித் தலைவராய் இருந்த ஜவஹர், மகாத்மாவின் ஆலோசனைக்காக வந்திருந்தார்.

காந்திஜி தமது சாதனையைக் கூறி பாலத்தின்மீது தடியை ஊன்றுமலே நேருவுக்குப் பெருமையுடன் நடந்துகாட்டினர். ஜவஹர் என்ன் செய்தார் தெரியுமா? பாலத்தில் நடக்காமலேயே ஒரு புறத்திலிருந்து மறுபுறத்துக்குத் தாவிவிட்டார். இதைக் கண்டு காந்திஜி மூக்கின் மீது விரலை வைத்துக்கொண்டார்.

*

பெர்னட் ஷாவை ஒரு பிரெஞ்சு அழகி கேட்டாள், "நீங்கள் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளுங்கள். நமக்குப் பிறக்கும் குழந்தை உங்களைப் போல் அறிவாளியாகவும் என்னைப் போன்ற அழகுடனும் பிறக்கும்" என்று.

ஷா திருப்பியடித்தார். "அழகியே, நீ சொல்வது வாஸ்தவம். ஆனல் உன் மாதிரி அறிவும் என்மாதிரி அழகுமுடைய பிள்ளை பிறந்துவிட்டால் என்ன செய்வது? அழகி பதில் பேசவில்லை.

"குழந்தைக்ள் எல்லாம் இயல்பாகவே தமது பராமரிப்புக்கும், பாதுகாப்புக்கும் தகப்பனிலும் பார்க்கத் தாயாரிலேயே தங்கியிருக்கின்றார்கள். இதனைச் சொல்லும் போது எனது உள்ளத்தில் நிறைந்த கவலை உண்டாகின்றது........"

# ஈழப்பாட்டனின் கடிதங்கள்

பேரறிஞர்கள் வரிசையில் தனக்கென ஒரு தனியிடம்வகித்து வரும் பேராசிரியர் திரு.செ. சுந்தரலிங்கம் எம்.ஏ. ஈழத்தாய் பெற்ற பெருமகனுவார். இளம் பிராயத்திலிருந்தே அறிவாற்றல் மிகுந்த திரு. சுந்தரலிங்கம் லண்டன் பல்கலைக் கழகத்திலும் பட்டதாரிப் பரீட்சையில் முதன்மையாகச் சித்தியடைந்தார். ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இவர் மாணவனுக இருந்த காலத்தில் மகத்தான தலைமைப் பதவிகளை வகித்து இலங்கைக்குப் பெரும் புகழ் ஈட்டிக்கொடுத்தார். அந்தக் காலத்தில் இந்தியப் பிரமுகர்கள் பலரின் நட்புறவையும் இவர் பெற்ருர்.



இலங்கை சிவில் சேர்விஸ் பரீட்சையிற் சித்தி பெற்றுப் பதவியேற்ருராயினும் அப்பதவியை 1922ம் ஆண்டில் ராஜினாமாச் செய்தார். பின்னர் இலங்கைச் சர்வ கலாசாலையில் கணிதப் பேராசிரியராகப் பதவியேற்ருர். தமக்குச் சரியாகத் தோன்றும் பிரச்சினைகளில் பிறர் தலையிடுவதை அவர் சகிக்கமாட்டார். எனினும் இலங்கைப் பல்கலைக் கழகம் உருவாகுவதற்காகச் சலியாது உழைத்தார். காலஞ் சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா இவரின் அலோசனைகளை பொன் போல் போற்றி மதித்து வந்தார்.

அரசியற் கொள்கையில்கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டபோதிலும் திரு. சுந்தரலிங்கத்துக்கு சிங்களத் தலைவர்களிடையே மிகுந்த செல்வாக்கு உண்டு.

வவனியா எம். பியாகப் பதவி வகித்த காலத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் பெரும் போராட்டங்களை நிகழ்த்தினர். இப்போது அரசியல் துறையிலிருந்து விலகிக்கொண்டாராயினும் சிறப்பாகத் தமிழரினதும் மேம்பாட்டில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்ருர்.

இந் நிலையில் தமது பேரப்பிள்ளைகளுக்கு எழுதும் இக் கடிதங்கள் அவருடைய அற்புத வாழ்க்கையில் நிகழ்ந்த அரிய சம்பவங்களை அனைவரும் அறிந்து கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பாகும்.

கணித மேதையாகவும் அரசியல் அறிஞராகவும் தமிழ்ப் பெருமகனுராகவும் விளங்கும் சுந்தரலிங்கனுர் இன்று வவனியாவிலுள்ள தமது இல்லத்தில் 'இராஜா'போல் வாழ்ந்து கொண்டு விவசாயத்திற் கருத்துச் செலுத்தி வருகின்ருர்.

ஆங்கிலத்தில் இவர் எழுதிய கடிதங்களை நாவலர் தாசன் தமிழிற் பெயர்த்துள்ளார்.

## அந்தக்காலத்திலே...

—பேராசிரியர் செ. சுந்தரலிங்கம்—

"மஹரலிங்க வாசம்" கீரிமலை
14-1-1962.

எனது அருமையான
ஞானலட்சுமி,

நீங்கள் தான் என்னுடைய முதலாவது பேத்தி. ஆனபடியால், எனது தாயாரைப்பற்றி எழுதுவதற்கேற்ற பொருத்தமான பேரப்பிள்ளையும் நீங்கள் அல்லவா?

என் தாயார் என்னைத் தன் தோள்மீது அணைத்து நித்திரையாக்கியிருக்கவேண்டும். திடீரென்று என்னை யாரோ நித்திரையிலிருந்து எழுப்பிவிட்டனர். அழுது கொண்டே எழும்பினேன். கண்களைத் திறந்து பார்த்தேன். பார்த்த இடமெல்லாம் பால்யமாக — பல திசைகளும் பால் உலகமாகவே—தெரிந்தன. இந்த உலகத்தில் பிறந்த எனது வாழ்க்கையின் முதல் அநுபவத்தின் ஞாபகம் இதுதான். நீங்களும், மற்றும் பேரப்பிள்ளைகளும் உங்கள் வாழ்க்கையில் முதன் முதல் சம்பவத்தை நினைவுகொள்ள முடியுமா? அப்படிச் செய்வது உங்களுக்கு மகிழ்ச்சியாகவும், வேடிக்கையாகவும் இருக்கும்.

### பால் உலகம்

நான் பின்னர் எனது அம்மாவிடமிருந்து அறிந்தேன், என்னைத் திடுக்கிட்டு அழுது கொண்டு எழும்படி செய்தவர் எனது ஐயாவென்று. என்னைச் சுற்றிலும் நான் கண்ட 'பால் உலகம்' என்னவென்று நீங்கள் அறிய விரும்புவீர்கள் அல்லவா? அதுதான் காங்கேசன் துறைமுகத்துக்கருகாமையிலுள்ள கடற்கரை ஓரத்தில் கண்ட காட்சி. ஆழம் குறைந்த கடலின் அலைகள் காற்றினல் அடியுண்டு வெண் நுரையாக்கப்பட்டு பால்போலத் தோன்றின. தூயவெண்மையான குருகு மணற்றிடல் கரையோரம் நீண்டு விசாலமாக இருந்தது. கடற்கரையும், அலைகளும் பால்போல் சிறப்பாக இருந்தன. ஆகாயத்தை அண்ணுந்து பார்த்தால் களங்கமற்று எங்கும் நீலநிறமாக இருந்தது. நல்ல காற்று வீசும். இரவு வேளையில் சந்திரிகை பாலாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தாள்.

அன்றுதான் எனது தகப்பனுர் கொழும்பிலிருந்து நீராவிக் கப்பல் மூலம் வீட்டுக்கு வந்திருந்தார். இந்துக்கள்—பௌத்தர்கள் புது வருடம், கிறிஸ்தவ 'ஈஸ்டர்' தினம் ஆகிய நீண்ட விடுமுறைக் காலத்தை எனது அம்மா பிறந்து வளர்ந்த உரும்பராய் என்னும் கிராமத்தில் கழித்து மகிழ வந்திருந்தார். அந்த நாளில் நான்தான் எனது பெற்ருருக்குக் கடைசிப்பிள்ளை. பஞ்சலிங்கமும், நாகலிங்கமும் நானும் பிறந்து விட்டோம். தியாகலிங்கமும், அமிர்தலிங்கமும் பிறக்கவில்லை. இதை நான் இதனுடன் அனுப்பும் புகைப்படத்தில் நீங்கள் கண்டு சிரிக்கக் கூடும். இந்தப் புகைப்படத்தில் நான் எப்படியிருக்கிறேன் என்று பாருங்கள். அப்போது எனக்கு 3 அல்லது 4 வயதுதான் இருக்கும், அதிசயமும்,வெருட்சியும், பயமும் உண்டாக எனது தாயாரைத் தழுவி நின்றவண்ணம் காணப்படுகின்றேன் அல்லவா?' நீங்களும் அப்படிச் செய்வதை நான் கண்டிருக்கிறேன். குழந்தைகள் எல்லாம் இப்படித்தான் செய்கின்றன. இயல்பாகவே, தமது பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் தகப்பனிலும் பார்க்கத் தாயாரிலேயே குழந்தைகள் தங்கி நடக்கின்ருர்கள். இதைச் சொல்லும் போது எனது உள்ளத்தில் நிறைந்த கவலை உண்டாகிறது. அதாவது, எத்தனை தாய்மார், அன்னையின் ஆரம்ப கடமைகளை இத்தனை கவனமாக அறிந்து பணிபுரிகின்ருர்கள், அல்லது, போதியளவு செய்யும் தகைமையும், சந்தர்ப்பமும், நிலைபரமும் உடையவர்களாய் இந்த உலகில் வாழ்ந்திருக்க முடிகிறது என்னும் எண்ணத்தினுல்தான். உங்களுடைய முப்பாட்டி தனது மக்களை எவ்வாறு பேணி, வளர்த்துக்காப்பாற்றி, மனிதராக்கி வைத்தாரோ, அதேபோல, நீங்களும் உங்களுடைய காலத்தில், அன்பும், சீலமும், அறிவும் மிக்கவோர் அன்னையாக இருப்பீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.



இலங்கையில் பஞ்சலிங்கம் குடும்பத்தாரை அறிமுகம் செய்ய வேண்டியதில்லை. இப் படத்தில் செல்லப்பா தம்பதிகள் தங்கள் புதல்வர்களில் மூவருடனும் உறவினருடனும் வீற்றிருக்கின்றனர். தகப்பனுருக்கருகில் திரு. பஞ்சலிங்கமும் தயாருக்கருகில் திரு. நாகலிங்கமும் குழந்தைகளாகக் காட்சியளிக்கின்றனர். செல்வக் குழந்தை சுந்தரலிங்கம் சின்னஞ் சிறியகதிரையில் உல்லாசத்துடன் காணப்படுகின்ருர்.

### எப்படி நிகழ்ந்தது?

உங்களுடைய முப்பாட்டி ஐந்தே ஐந்து ஆண்பிள்ளைகளைப் பெற்று வளர்த்தார். உங்களைப்போல் இனிமையான ஒரு பெண்பிள்ளையேனும் அவர் பெற்றெடுக்கவில்லை. ஐந்து ஆண்பிள்ளைகளுடைய பெயர்களையும் ஏற்கனவே சொல்லிவிட்டேன். மூத்தவர் பஞ்சலிங்கம். நீங்கள் என்னை ஒரு கேள்வி கேட்கக் கூடும். அதே கேள்வியை என்னிடமிருந்து பலசாதி, சமய நண்பர்களும் பலமுறை கேட்டுக்கொண்டேயிருக்கின்ருர்கள். "முதல்வருக்கு பஞ்சலிங்கம் என்று பெயரிட்டதும், ஐந்து லிங்கம் சகோதரர்" மட்டுமே பிறந்ததும் அதிசயமல்லவா? இது எப்படி நிகழ்ந்திருக்கலாம்? என்பதுதான் அந்தக் கேள்வி. இந்தக் கதையைக் கேட்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். உங்களுடைய முப்பாட்டி தனது முதல் மகனைப் பெற்றதும், முப்பாட்டனுருக்கு ஆனந்தம் உண்டாயிற்று. உடனே அவர் அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தின் தலை சிறந்த சோதிடரிடம் போய் தனது தலைப்பிள்ளையின் சாதகத்தைக் கவனமாக ஆராய்வித்துக் குறிப்பு எழுதுவித்தார். சாத்திரியாரும், பஞ்சாங்கங்களைப் படித்து கணக்கிட்டபின்னர் ஐயாவிடம் பின்வருமாறு கூறியதாக அம்மாவிடமிருந்து அறிந்தேன்.

"நீங்கள் நான் சொல்வதைக் கேட்டுக் கலக்கமடைய வேண்டாம். நீங்கள் ஐந்து ஆண்பிள்ளைகளுக்கு மாத்திரம் பிதாவாக இருப்பீர்கள். உங்கள் கடைசி மகன் பிறந்து ஒரு வருடத்துக்குள் நீங்கள் இந்த

(10ம் பக்கம் பார்க்க)

குனேகா செண்டுகள்
வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற
குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்
தயாரிப்பவர்கள்:
குனேகா அடையார், மதராஸ் 20.
இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருதெனியா.
கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:
செல்வாஸ் (SELVAS)
(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)
31, செட்டியார் தெரு, கொழும்பு.
யாழ்ப்பாண விற்பனையாளர்:
தமிழ்ப் பண்ணை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சிலம்பின் சிறப்பு: 1

# கூற்றுக்கோயிலும் காப்பியக் கோயிலும்

— வித்துவான் பொன். முத்துக்குமாரன் —

மகாபாரதத்தில் அற்புதமான ஒரு கதை உண்டு. சந்தனு மகாராசன் கங்கையை மணந்து ஒரு மைந்தனைப் பெற்றான். அம்மைந்தன் வளர்ந்து அழகிய காளைப்பருவம் அடையும் காலத்தில் தன் தந்தையின் மறுமணம் நிறைவேறுதற் பொருட்டுத் தான் பிரமச்சரிய விரதத்தை மேற்கொண்டான். பெற்ற தந்தையின் மகிழ்ச்சியைக் காண முற்றுகத் தன் சுகத்தைக் துறந்த அம்மைந்தனின் செயலைக்கண்டு தேவரும் யாவரும் ஆச்சரியமுற்றனர். வியக்கத்தக்க விரதம் பூண்டமையால் அம்மைந்தன் பின்னர் வீஷமன் எனப் பெயர் பெற்றான். இந்த வீரச் சம்பவம் நடந்த அந்தப் பாரதநாட்டிலேயே பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து மற்றுமோர் அரிய செய்தி நிகழ்ந்தது. பாரதத்தின் தென்கோடியிலே பழங்குடி மக்களுள் ஒருவர் என நூல்கள் பறைசாற்றும் சேரர் குடி அந்தத் தீரச் செயலைப் புரிந்தது.

## நிமித்திகன் கூற்று

சேரமன்னனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் மைந்தர் இருவரோடும் அரியணையில் இருக்கையில் ஒரு நிமித்திகன் அவ்விடத்து வந்தான். அரசன்பக்கலில் இருந்த மைந்தர்களில் இளையோன் மீது அவன் பார்வை பதிந்தது. அப்போது அவன் மனத்தில் ஒரு கருத்துத் தோன்றியது. அவன் சேரலாதனை வாழ்த்தி, "அரசே, உனக்குப் பின் உன் இளமைந்தனே இந்நாட்டை ஆழ்வான்" என்றான். அதனைக்கேட்டதும் மூத்தோனான செங்குட்டுவனின் முகம் வாட்டமுற்றது. இளையவன் தன் அண்ணனின் மனக்கவலையைக் குறிப்பாலறிந்து, அவன் வாட்டமெல்லாம் தீர்க்க எண்ணினான். தான் அரசனாவதில்லை என்றும், தன்னண்ணனும் அவன் பின்னோனுமே ஆளும் உரிமையை அடைய வேண்டும் என்றும் முடிவுசெய்தான். உடனே எழுந்து, "நிமித்திகனே, நான் அரசனாவேன் என்று கூறிய உன் வார்த்தையைப் பொய்ப்பிக்கின்றேன் பார்" என்று கூறி' அப்பொழுதே தன் அரச உடையைக் களைந்து துறவியாய்த் தவக்கோட்டமடைந்தான். தமையன் அரசனாய்ச் சிறப்பதுவே தம்பிக்குப்பேரின்பம். தன் துறவினால் அவ்விளமைந்தன் தமையனுக்கு மட்டுமன்றி அவன் சந்ததியோர்க்கும் அரசுரிமையை ஈந்துவிட்டான். ஈத்து உவக்கும் இன்பமும், இம்மை இன்பத்தைத் துறக்கும் வீரமும் அவனது இளம் உள்ளத்திலேயே முளைவிட்டிருந்தன!

## துறவிலே பலவகை

துறவிலே பலவகை உண்டு. கடன் முதலிய தொல்லைகளினாலே காவியுடையை நாடுவதும் ஒருவகை. துறந்தாரின் வேடத்தைத்தாங்கி ஊர்களில் ஒற்று அறிவதும் ஒருவகை. "துப்புரவில்லார் துவரத் துறவாமை உப்பிற்கும் காடிக்கும் கூற்று" ஆதலால் வறுமை காரணமாக வலிந்து கொள்ளும் துறவும் ஒருவகை. இவற்றைவிட மனைவி சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளேயாமாகில் கூறுமல் சந்நியாசம் கொள்ளுதலும் ஒருவகைத் துறவுதான். மெய்ம்மைத் துறவோ இவையெல்லாவற்றையும் விட வேறானது. அது முன்னைத் தவத்தால் அடைவது. விட்ட குறை தொட்ட குறையாய் உள்ளத்தே ஒட்டி நிற்பது. இளங்கோவின் துறவும் அத்தகையதே. அது இயற்கையாய், அன்புள்ளத்தினின்றும் அரும்பியது. மெய்ப்பொருளையும் மெய்யான இன்பத்தையும் அடையவேண்டுவார் அன்புள்ளத்தராதல் வேண்டும் அல்லவா? தமையனிடத்தில் வைத்த அன்பினால் தரணியை ஆளும் வேட்கையையே வேரோடு களைந்த இளங்கோ துறவிகள் வாழும் இருக்கையை அடைந்தார். ஆரவாரமின்றி அமைதியான கருத்தோடு அறிவு நூல்கள் பலபல கற்றுணர்ந்தார். கல்வி ஏறும்தோறும் அவரிடத்தில் நல்லறிவு ஊறிப் பெருகியது. நல்லறிவு சுரந்து பெருகப் பெருக, பல்லுயிர்களிடத்திலும்அருள் பரந்தது. அந்நிலையில் அவர் தாம்பெற்ற இன்பம் இந்தத் தரணியெல்லாம் எய்த ஆசைகொண்டார். காக்கை கரவா கரைந்துண்ணும். மெய்ஞ்ஞானிகளும் தாம்பெற்ற மேலான இன்பத்தை மற்றவர்களும் எய்த வழிகாட்டுவார்கள். மனித சமூகம் ஆசா பாசங்களினால் மாசு நிறைந்து வாழ்வின் இலக்கை அறியாது தாழ்வெய்தும் காலங்களிலெல்லாம்கலங்கரைவிளக்குப்போய் கரைகாட்டுமாறு பெரியோர்கள் காப்பியங்களைப் படைத்தளித்திருக்கின்றனர். இளங்கோவடிகளது உள்ளத்திலும் மக்களுக்கு என்றும் வழித்துணையாய் நிற்க வல்ல இலக்கியம் செய்யவேண்டும் என்ற கருத்து முழ்கித்திருந்தது. அது பின்னர் சிலப்பதிகாரமென்னும் தேமலராக மலர்ந்தது.

### இலக்கியச் சோலை

## இளங்கோ ஆசை

சிந்தனையாற்றலும் கலை நுணுக்கமும் தேர்ந்த சிற்பி ஒருவர் சாதாரண பொருள்களிலெல்லாம் தன் கலைத் திறனைப் பொறிப்பதில்லை. அவன் மண்ணிலும் மரத்திலும் வடிக்கும் சிற்பம் அற்ப காலத்துள் அழிந்துவிடும். ஆகவே தன் கலை அழியாது நிலைத்துநிற்க வேண்டுமாயின் உறுதியும் உயர்வும் பொருந்திய மூலப் பொருளையே சிற்பவேலைக்குத் தெரிந்தெடுக்கின்றான். அதுபோலவே தெய்வத்திறம் படைத்த செந்தமிழ்ப் புலவர்களும் சிறிய செய்திகளைவிட்டுவிட்டு,சீரியமக்களின் வாழ்க்கைச் செய்தியைக் காப்பியப் பொருளாகத் தேர்ந்தெடுக்கின்றார்கள். எத்தனையோ கதைகள் இந்தத் தமிழ்நாட்டில் வழங்கியிருப்பவும் கம்பர் கருத்து இராமன் கதையை நாடக் காரணம் யாது? வாய்மை, நீதி வன்மை, கற்பு என்னும் நற்பண்புகளே, மக்கள் வாழ்க்கையை எக்காலும் நிலைக்கச் செய்வன. அத்தகைய பண்பு வாய்ந்த நல்லோர் செய்தியை அறியவும் அதனைக் காவியமாகப் புனையவும் இளங்கோ ஆசைப்பட்டார். சீத்தலைச் சாத்தனர் கண்ணகியின் கதையைக் கூறியது இளங்கோவின் ஆசை நிறைவேறும் வாய்ப்பை அளித்தது. ஒருவரது உள்ளக்கிடக்கையின் ஆழமும் கல்வியின் அகலமும் மதியின் நுண்மையும் செயல் வடிவில் உருப்படும்பொழுதே பிறர்க்குப் புலனாகும். இளங்கோவடிகளின் உயர்ந்த உள்ளமும், அகன்ற கல்வியும்,

(5ம் பக்கம் பார்க்க)

## புதிர்

— 'தில்லைச்சிவன்' —

கன்னல் இனிப்ப தென்ன
நுனி கசப்ப தேன்? — மாங்
காய் புளிக்கக் கனி இனிக்கும்
காரணம் என்ன ?
விண்ணின் நிரவி கொடுந்
தீ பரப்பவே — அதை
வேண்டிமதி தண்ணொளியாய்
வீசுத லென்னே !

பொங்குந் தளிர்க் கரத்தைக்
கொண்ட மென் தென்றல் — பெரும்
புயலாகிப் பூமி முற்றும்
பூழி படுத்தும்
வங்கங்கள் ஓடி விளை
யாடி மகிழ்ந்த — உவர்
வாரி அலை எறிந்து
ஊழிக் கழைக்கும்.

இருட்டிற் பெருந்துணையாய்
இருந்த விளக்கு — வாழும்
இல்லத்தை நீறுபடச்
செய்து நிற்பதேன் ?
மருட்டி வளர்த்த அன்பு
பாசம் என்றிடும் — அந்த
மாசக்தி எம்முறவை
மாற்றி நிற்பதேன்?

அறிவினைத் தெய்வம் என்று
போற்றி வளர்த்தோர் — அந்த
அறிவால் உயர்ந்து லகை
மாய்த்து மடிந்தார்
புரியின் பிறந்திறத்தல்
என்ப தொன்றன்றி — வேறு
பேச் செதற்கு நாம் உலகப்
பெட்டியுட் பாம்பே !


தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ
உகந்தது ஜம்பிங் பிஷ்
பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, கனமில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் கிடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.



ஏக விநியோகஸ்தர்கள்:
சி. டப்ளியூ ஈ
கிடைக்குமிடங்கள்: சி. டப்ளியூ. ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மக்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ. ஈ. தரத்திலும் ரகத்திலும்
உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது

ரங்கேலுக்கு இரவில் கூடத் தூக்கம் சரியாக வருவதில்லை. ஆடு மேய்ப்பவர்களுக்காகச் சிறிய நடமாடும் வீடுகளைப் பண்ணை நிர்வாகம் கட்டிக் கொடுத்திருந்தது. இருப்பினும் அவன் தனது வீட்டில் உறங்குவதில்லை. ஆட்டுப்பட்டியில் தான் உறங்கி வந்தான். நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டும் திறந்த வெளியில் வீசும் தென்றலை நுகர்ந்தும் அவன் இன்பமுற்ருன்.

# மேய்ப்பன்

சிறுகதை

சிறுவன் ரங்கேல் கூட்டுப் பண்ணையின் ஆட்டுப்பட்டியில் தான் உறங்குவது வழக்கம். அவனுடைய தகப்பனர் அந்தக் கூட்டுப்பண்ணையில் ஆடு மேய்ப்போனக வேலைசெய்து வந்தார். பள்ளிக்கூடத்தில் படித்து, நல்ல அறிவுள்ள பிள்ளையாக வளர்ந்துவந்தான் ரங்கேல். ஆனல், விதி சதிசெய்து விட்டது. அவனுடைய அருமைத் தாய் திடீரென்று ஏதோ நோய்கண்டு, அகால மரணம் அடைந்தாள். ரங்கேலால் வெகுகாலம்வரை இந்தத் துயரத்தை மறக்க முடியவில்லை. 'பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பதுபோல் ரங்கேலின் தகப்பன், அடுத்த கிராமத்தில் வாழ்ந்த ஒரு மோகினியின் மையலிலே வீழ்ந்து, தனது குடும்பத்தையே மறந்துவிட்டான். முடிவாக அவன், அந்த மோகினியின் கிராமத்துக்கே குடியேறிவிட்டான்; பெற்ற மகனை நடுத் தெருவில் விட்டுவிட்டு. ரங்கேலுக்கு அப்பாவின் வீட்டுக்குச் செல்வதற்கு விருப்பமில்லை. எனவே, அவன் கூட்டுறவுப் பண்ணையின் ஆட்டுப் பட்டியையே சுற்றிவந்தான். முதலில் அந்தக் கிராமத்து இடையர்கள் அவனிடம் அவனது தாய் தந்தையர்பற்றி ஏதும் பேசாதிருந்தனர். தோடர் மாமா ஒருநாள் ரங்கேலைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, "தம்பி, கவலைப்பட்டு என்னபயன்? என் மனைவி அதுதான் உன் மாமி... கொஞ்சம் கோழிசூப்பும் ரொட்டியும் அனுப்பியிருக்கிருள். அதோ அலமாரியில் இருக்கிறது. அதை நீ சாப்பிடு" என்ருர்.

சிறுவன் ரங்கேல் வயிருர உண்டு நன்றியுடன் முறுவலித்தான். அப்போது அங்கே, வாசிலி தாத்தா வந்துசேர்ந்தார். சிறுவன் ரங்கேலைப் பார்த்ததும் அவர் அன்புடன் முறுவலித்தவாறே "இவன் தான் நம் பண்ணையின் இளம் உதவியாளர்" என்ருர். "உன்னைப் பார்த்தால் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றும் அவர் கூறினர். "ஒரு குறையும் இல்லாமல் பார்த்துக்கொள்வோம் நாங்கள். அதிருக்கட்டும், நீ எந்த வகுப்பில் படித்துவந்தாய்?"

"ஆருவது"—ரங்கேல் வெட்கத்துடன் பதிலளித்தான்.

"நல்லது. நீ பள்ளிக்கூடத்தை விட்டிருக்கக்கூடாது. பழங்காலத்தில் நாங்களெல்லாம் படிக்கவே முடியவில்லை. பணக்கார பண்ணையாளர்கள் எங்களை எழுத்தறிவில்லாத அடிமைகளாக வைத்திருக்க விரும்பியதுதான், அதற்குக் காரணம். ஆனல் இப்பொழுது நிலைமைவேறு. நான்கூட இப்பொழுதுதான் எழுதப் படிக்சக் கற்றுக்கொண்டேன். ஆனல் நீ..." — சிறுவனின் கண்கள் கலங்குவதைக்கண்ட தாத்தா மேலே பேசாமல் நிறுத்திக் கொண்டார்.

பிறகு தாத்தா தோடர் மாமாவைப்பார்த்து, "இதோ பார், தோடர் எனக்கு வயதாகிவிட்டதால் இரவில் தூக்கமே வருவதில்லை. அப்பொழுதெல்லாம் எனது மனம் நமது ரங்கேலைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறது. நமக்கும் நமது ஆட்டுக்குட்டிகளைக் கவனிப்பதற்கு ஓர் ஆள் தேவை தானே. ரங்கேலைவிடத் தகுதியான ஆள் யார் கிடைக்கப் பேகிருர்கள் நமக்கு?"

"ஆமாம், தாத்தா. ஆனல் வேலை கோஷ்டித் தலைவரிடமும் கூட்டுப்பண்ணைத் தலைவரிடமும் நாம் இதுபற்றிப் பேசவேண்டும்."

ரங்கேல் தலையைக் குனிந்து கொண்டு மௌனமாக நின்ருர். சிறிது நேரம் கழிந்ததும், "எனக்கு எந்த வேலை கொடுத்தாலும் நான் செய்யத் தயார். பண்ணையில் இருப்பதற்குத் தான் எனக்குப் பிரியம்" என்ருர்.

இவ்வாறுதான் அவன் ஆட்டுப்பட்டியிலேயே தங்கிவிட்டான்.

ரங்கேல் நாளடைவில் நல்ல ஆடுமேய்ப்போனக ஆகிவிட்டான். அவன் தனது ரொட்டியையும் பாலாடையையும் வைத்துக் கொள்வதற்கு பண்ணை நிர்வாகம் ஒரு தோல் பையை அவனுக்கு வழங்கியிருந்தது. இதன்றி எல்லா இடையர்களைப்போல் ஒரு மரத்தடியையும் அவன் வைத்திருந்தான். அந்தத் தடியை நகே தாத்தா அவனிடம் கொடுத்திருந்தார். மிகச்சிறந்த ஆடுமேய்ப்போன் என்ற பட்டம் பெற்றபின், இப்பொழுது ஓய்வுபெற்ற பென்ஷன் வாங்கியிருப்பவர் அவர்.

ரங்கேல் தனது ஆட்டுக்குட்டிகளை நன்கு பராமரித்து வந்தான். கோடைகாலத்தில் இடையர்கள் ஆட்டு மந்தைகளை அதிகாலையில் புல்வெளிக்கு ஓட்டிச் செல்வதும், மாலையில் இருட்டியபிறகே ஆட்டுக் கிடைக்குத் திரும்புவதும் வழக்கம்.

ரங்கேலுக்கு இரவில்கூட தூக்கம் சரியாக வருவதில்லை. ஆடு மேய்ப்பவர்களுக்காக சிறிய நடமாடும் வீடுகளைப் பண்ணை நிர்வாகம் கட்டிக் கொடுத்திருந்தது. இருப்பினும் அவன் தனது வீட்டில் உறங்குவதில்லை. ஆட்டுப்பட்டியில்தான் உறங்கி வந்தான். நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டும், திறந்த வெளியில் வீசும் தென்றலை நுகர்ந்தும் அவன் இன்பமுற்ருன்.

> பல்கேரியாவில் சிறுகதை இலக்கியம் நன்கு வளர்ச்சியுற்று வருகின்றது. குரும் கிரிகோரோவ் எழுதிய 'மேய்ப்பன்' என்ற கதையின் தமிழாக்கம் இது.

ஆனல் எல்லா நாட்களுமே இன்பமயமானவையாக இருக்கவில்லை. சில நாட்களில் மழையும் இடியும் மின்னலுமாக இருக்கும். ஒரு நாள் வென்கோ, அறுவடைத்தொழிலாளர்களுக்கு உதவி செய்வதற்காகச் சென்றிருந்தார். இதனல் ரங்கேல் தனியாக ஆட்டுக் குட்டிகளை கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது ஆட்டுக்குட்டிகளை ஓட்டிக் கொண்டு, ஓர் மலைச் சரிவை அடைந்தான் அவன். அந்தப் புல்வெளியின் அருகில் ஒரு குளிர்ந்த நீரோடை ஓடிக் கொண்டிருந்தது. திடீரென்று மலை உச்சியிலிருந்து பெரும் சப்தம் கேட்டது. சிறிது நேரத்திற்குள் பயங்கரமான இடியும் மின்னலும் தோன்றின. அதையடுத்து ஆலங்கட்டி மழை பெய்யத் தொடங்கி விட்டது. கட்டிகள் தொடர்ச்சியாக விழுந்துகொண்டிருந்தன. சிறுவன் ரங்கேலின் மண்டையோடு உடைந்து விடும்போல் தோன்றியது. ஆட்டுக்குட்டிகள் பெரும் இரைச்சல் போட்டன. பாவம் சிறுவன், என்ன செய்வான்? ஆட்டுப்பட்டிக்குத் திரும்பிவிடலாமா? அது எப்படி முடியும்? ஆட்டுப்பட்டி வெகுதூரத்தில் அல்லவா உள்ளது? ஆட்டுக் குட்டிகள் என்னவானல் என்ன, அவன் மட்டும் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக எங்காவது ஓடிவிட்டால் என்ன? ஆனல் அவனது கடமை உணர்ச்சி மேலோங்கியது. சிறுவனின் கஷ்டங்களைப்பற்றி கவலைப்படவில்லை. அந்தப் பாழாய்ப் போன ஆலங்கட்டி மழை! ஈவிரக்கமின்றி அவன் தலையைப் பதம்பார்த்தன, பனிக் கட்டிகள். மழைநீர்மலைச்சிகரத்திலிருந்து அருவியாக ஓடியது அதில் இரு ஆட்டுக்குட்டிகள் வெள்ளத்தோடு வெள்ளமாய் அடித்துக்கொண்டு போயின. சிறிவன் ரங்கேல் துணிச்சலுடன் அருவியில் குதித்து, தனது உயிரைப் பணயம் வைத்து அந்த ஆட்டுக்குட்டிகளைக் காப்பாற்றினன்.

முடிவில் மழை ஒருவாறு நின்றது. அப்போது "ரங்கேல், ரங்கேல்!" என்று கூவிக் கொண்டே தோடர் மாமாவும் வாசிலி தாத்தாவும் அங்கு ஓடிவந்தனர்.

அவர்களைக் கண்டதும் ரங்கேலின் உள்ளத்தில் நிம்மதி பிறந்தது.

அவர்கள் இருவரும் சிறுவன் ரங்கேலை ஏககாலத்தில் கையால் தூக்கி முத்தமிட்டனர். "ரங்கேல், என் கண்ணே, நீ உயிரோடு இருக்கிருயா?" என்று கேவிக்கேவி அழுதார், வாசிலி தாத்தா.

"எத்தனை ஆட்டுக் குட்டிகள் வெள்ளத்தில் போய்விட்டன?" என்று தாத்தா கேட்டார்.

"இரண்டு ஆட்டுக்குட்டிகள் வெள்ளத்தில் போய்விட்டன. ஆனல் நான் அவற்றை மீட்டுக்கொண்டுவந்து விட்டேன்" என்ருன் ரங்கேல்.

"நாம் நமது ரங்கேலை இப் பண்ணையின் தத்துப் பிள்ளையாகத்தான் கருதவேண்டும். நாம் நமது பண்ணைத் தலைவரிடம் இதைப்பற்றிக் கூற வேண்டும். ரங்கேல், கவலைப் படாதே! நீ இனிமேல் இப் பண்ணையின் புத்திரன். உன் வேலைக்காகக் கிடைக்கும் சம்பளத்தை நீ வங்கியில்போட்டு சேர்த்துவைக்கலாம். நீ மீண்டும் பள்ளிக்கூடத்தில்சேர்ந்து படிக்கத்தான் வேண்டும்" என்ருர் தாத்தா.

"ரங்கேல் தொப்பையாக நனைந்துவிட்டிருக்கிருன். உடனே அவன் உடைகளை மாற்றவேண்டும். கிளம்பு, வாசிலி" என்று வாசிலியைப் பார்த்துக் கூறினர் தாத்தா

அவர்கள் மூவரும் ஆடுகளை ஓட்டிக்கொண்டு ஆட்டுப்பட்டியை அடைந்தனர்.

இப்பொழுது ரங்கேல் அக் கிராமத்தின் மாலைப் பள்ளிக்கூடத்தில் படிக்கிருன். சாப்பாடு எல்லாம் தோடர் மாமா வீட்டில் தான். வாசிலி தாத்தா அவனுக்கு வேண்டிய உடைகளைத் தைத்துக் கொடுத்து விடுகிருர். சில சமயங்களில் அவன் கூட்டுறவுப்பண்ணையின் உணவு விடுதியில் சாப்பிடுவதும்உண்டு. அங்கே அவன் சில சமயம் போவதற்குக் காரணம் பெர்சா அத்தையின்மீதுள்ள பிரியத்தினல்தான். அவள் தான் அவ்வுணவு விடுதியின் பொறுப்பாளர்.

## உங்கள் இராசி பலன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பும் புதுமுயற்சிகள்கை கூடவும் காணப்படுகின்றன. வர்த்தகத் துறையினருக்கு பல துறைகளிலும் நற்பெயரும் வருமானமும் காணப்படுகின்றன. பெண்களுக்கு சகல துறைகளிலும்மதிப்பும் சந்தோஷமும் காணப்படும். ஆயினும் நிதானம் வேண்டும். இவ்விராசியாளருக்கு 20, 21 (பிப்ரவரி 2, 3)ந் தேதிகள் சுபதினங்களாகும். இதர தினங்கள் அசுபபலன்களைத்தருவனவாகும்.

## சிலம்பின் சிறப்பு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நுணுகிய மதித்திறனும், சால்பு நிரம்பிய தகைமையும் அவரது காப்பியத்தின் வாயிலாகத் தெள்ளிதில் அறியக்கிடக்கின்றன.

### சேரர் மரபில்

சேரர் மரபில் வீரரென உதித்த அண்ணனும் தம்பியுமான இருவர் இருவகையில் சமானமின்றி விளங்குகின்றனர். மூத்தோனை செங்குட்டவன் பொருளுலகிற்கு வேந்தனய் விளங்க இளையோரான இளங்கோ அருளுலகிற்கும் அறிவுலகிற்கும் அரசனய்த் திகழ்ந்தார். அண்ணனை செங்குட்டுவன் புறப்பகையாகிய வடநாட்டரசர்களை வென்று மறப்புகழை நிலைநிறுத்தினன். தம்பியாகிய இளங்கோ அகப்பகையாகிய ஆசை முதலியவற்றை வென்று அந்தமில் இன்பம் பெற்ருர். அரசனை செங்குட்டுவன் கண்ணகிக்குக் கற்கோயில் எழுப்பி, நாடெங்கும் விழாக் காணச் செய்தான். அடிகளான இளங்கோ கற்புடைச் செல்வியான அக்கண்ணகிக்கே காப்பியம் அமைத்து, தமிழ் உள்ளளவும் கற்பின் பெருமை தழைக்கச் செய்தார். கண்ணகி வழிபாடு ஒவ்வோரிடத்துக் கைவிடப்பட்டதாயினும் சிலப்பதிகாரக் காப்பிய மேம்பாடு காலந்தோறும் சிறந்து வருகின்றது.



100 கிலோ மீட்டர் பரப்பு தண்ணீர் புறத்திலுள்ள கால நிலையை அளந்து தெரிவிக்கவல்ல உபகரணக் கப்பல் ஒன்று மெக்ஸிக்கோ குடாவில் நங்கூரமிட்டு நிறுவப்பட்டுள்ளது. 'நோமாட்'என்று அழைக்கப்படும் இந்த உபகரணம் ஆட்களின் உதவியின்றித் தாளுகவே தொழிலாற்றுமாம். தண்ணீர், காற்று ஆகியவற்றின் உஷ்ண நிலையையும் காற்றின் வேகம், திசை ஆகியவற்றையும் நீரோட்டங்களின் திசைகளையும் இந்த உபகரணம் அறிவுறுத்தும்.

# உலக மேடை

— டி. எம். எம். —

## கென்னடி முயற்சி

பதினன்கு ஆண்டுகளாக இழுத்தடித்து வந்த காஷ்மீர்ப் பிரச்சினையில் ஒரு புதிய திருப்பம் தோன்றியிருக்கிறது. அதாவது தீர்வுக்கான நம்பிக்கை ஓரளவு தென்படுமாப் போல் தோன்றுகிறது. நாம் ஏற்கெனவே கூறியபடி வாஷிங்டனிலும் நியூயோர்க்கிலும் நடைபெற்ற ராஜதந்திர முயற்சிகளைத் தொடர்ந்து உலக வங்கித் தலைவர் திரு. இயூஜின் பிளாக்கை சமரசத் தீர்வுக்கு முயற்சிக்கும் பணியில் ஜனதிபதி கென்னடி ஈடுபடுத்தியிருக்கிறுர்.

சமாதானப் பணியில் திரு. கென்னடி ஆற்றிவரும் சேவை புகழத்தக்கதாய் இருக்கிறது. தன்னை ஒரு ஜனதிபதியாகத் தேர்ந்தெடுத்தால் அமெரிக்காவை ரூஸ்வெல்ட் காலப் பெருமைக்கு இட்டுச் செல்வதாய் தமது தேர்தலுக்கு முன் திரு. கென்னடி கூறியிருந்தார். அதை அவர் விஸ்வாசமுடன் படிப்படியாய் நிறைவேற்றி வருகிறுர் என்றே சொல்லலாம். காங்கோ, மேற்கு இரியன் ஆகிய இடங்களில் சமாதானத்தை நிலைநாட்டுவதில் திரு. கென்னடி மேற்கொண்ட முயற்சிகள் உண்மையானது என்பதில் சந்தேகமில்லை. ஜனதிபதி ஐஸன்ஹோவரின் காலத்திலிருந்ததைப் போன்ற மோசமான கிழக்கு - மேற்கு உறவு திரு. கென்னடியின் காலத்தில் இல்லை என்றே கூறலாம். கெடுபிடி யுத்த அடிப்படை இருக்கத்தான் செய்கிறதென்ற போதிலும் அமெரிக்கா மீது ரஷ்யா இப்போது படு மோசமாகத் தாக்குவதில்லை என்பதை விஷயமறிந்தவர்கள் ஊகித்தறியலாம்.

காஷ்மீர் பிரச்சினையில் திரு. கென்னடி எடுத்துவரும் முயற்சியை இரு நாடுகளும் பயன்படுத்திக் கொண்டால் நல்லது என்பதில் சந்தேகமில்லை. நிலைமையின் போக்கிலிருந்து பிரச்னையைத் தீர்க்க இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுமே ஆவலாயுள்ளன என்பது தெளிவாகிறது.

காஷ்மீர் பிரச்னையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வந்த மேற்கு நாடுகளும் கூட இப்போது இப்பிரச்னை தீர்வதில் அக்கறை காட்டுகின்றன என்பதற்கு அறிகுறி தோன்றியிருக்கிறது. பாதுகாப்பு சபையில் பிரச்னையை அவசரமாக விவாதிக்க வேண்டுமென பாகிஸ்தான் துடி துடித்தது அனைவருக்கும் தெரியும். புதிதாக காஷ்மீரில் எவ்வித நிலைமையும் தோன்றியிராத போதும் கூட அவசரவிவாதத்துக்குப் பாகிஸ்தான் வற்புறுத்தியது. காஷ்மீர் எல்லையில் 85 சத விகித இந்தியத் துருப்புக்கள் திரண்டிருப்பதாயும், சில இந்தியத் தலைவர்கள் தாக்குதல் பற்றிப் பேசியிருக்கிறுர்கள் என்பதுமே பாகிஸ்தான் இந்த விவாதத்திற்குக் காட்டிய ஆதாரங்களாகும். ஆனல் இவை போதுமானவை அல்ல என்பது மேற்கு நாடுகளுக்கே விளங்கியிருக்கும். பாதுகாப்பு சபையின் இவ்வாண்டுத் தலைவரும் பிரிட்டிஷ் பிரதிநிதியுமான திரு. பெற்றிக் டீன் காஷ்மீர் விஷயத்தை விவாதிக்க சபை அங்கத்தினர்கள் ஊக்கம் காட்டவில்லையென அறிவித்திருக்கிறுர். பாதுகாப்பு சபையில் பாகிஸ்தானின் கூட்டாளிகள் இருந்தும் கூட காற்று திசை மாறி வீசுகிறது என்பதற்கு பிரிட்டிஷ் பிரதிநிதியின் பேச்சு உதாரணமாக விளங்குகிறது.

காஷ்மீர் தீர்வுக்கு அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிக்கு பிரிட்டன் போன்ற நாடுகளும் உதவி செய்து வருகிறதென நியூயார்க் வட்டார சம்பவங்களிலிருந்து தெரிகிறது.

பாகிஸ்தான் பிரதிநிதிகள் ஜனதிபதி கென்னடியுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறுர்கள். வாஷிங்டன் — டில்லி — கராச்சிக்கிடையே காஷ்மீர் பற்றி தீவிர பரிபாஷைகள் நடைபெற்று வருகின்றன. பூர்வாங்க ஏற்பாட்டுக்கு வழி திறக்கப்பட்டிருக்கிறது. ஆனல், வழியில் என்னென்ன சிக்கல்கள் ஏற்படுமோ சொல்ல முடியாது. இவைகளை தகராறில் சம்பந்தப்பட்ட நாடுகள் எவ்விதம்தாண்டிச் செல்கின்றன என்பதிலேயே விஷயம் தங்கியிருக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை காஷ்மீரை இப்போதைய நிலையில் எல்லைப்பிரிவினை செய்யும் அளவுக்கு அது விட்டுக் கொடுக்குமா என்பது பற்றிக் கூறுவது கஷ்டமானது. இப்படிச் செய்வதானல் ஒரு பகுதி காஷ்மீரை இந்தியா இழக்க நேரிட்டாலும் கூட மற்ருேர் எல்லைப் பிரச்சினையும் அதற்கில்லாமல்போகும். அதாவது பாகிஸ்தான்வசமுள்ள கில்ஜிட்டில் சீன 4000 சதுர மைல் பிரதேசத்தை உரிமை கோருவதாகக் கூறப்பட்டதல்லவா? அந்தத் தலைவலியை இந்தியா பாகிஸ்தானுக்கு விட்டுவிடும்.

சமரசத்துக்காக நியமிக்கப்பட்டிருக்கும் இயூஜின் பிளாக் இருநாடுகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்தான். திறமை வாய்ந்த அவரது முயற்சி எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்பதை இப்போதே சொல்ல முடியாது. இருநாடுகளுக்குமிடையே இருந்த கால்வாய்த் தண்ணீர்த் தகராறை திரு. பிளாக் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்ததை மறந்துவிட முடியாது.

## தங்கனீகா

கிழக்காபிரிக்காவிலிருக்கும் தங்கனீகாவின் பிரதமர் திரு. நியாரரே சமீபத்தில் தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்திருக்கிறுர்.

ராஜினமாச் செய்த பிரதமர் தமது "தனு" கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டிருப்பதுடன், புதிய மந்திரி சபையையும் அவரே நியமித்துள்ளார். மந்திரி சபையில் ஏற்பட்ட நெருக்கடியே அவரது ராஜினமாவுக்குக் காரணம் என சில வட்டாரங்களில் கூறப்பட்ட வதந்தியை அவர் மறுத்திருக்கிறுர். திரு. நியாரரே தங்கனீகாவில் மிகவும் செல்வாக்குப்பெற்ற தேசியத் தலைவர். அவரது கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியபின் 2 மாதங்கள் கூட அவர் பதவி வகிக்கவில்லை. ஆயினும் கட்சித் தலைவராய் இருந்து கொண்டே மறைமுகமாக அரசாங்கத்தை நடத்திச் செல்ல முயலும் அவரது நடவடிக்கை புதிராய்த்தான் இருக்கிறது. அவரது கட்சியிலேயே அபிப்பிராய பேதம் நிலவுவதாயும் கூறப்படுகிறது.

## இன ஒதுக்கல்

தென்னபிரிக்க இனஒதுக்கல் கொள்கை சொந்த நாட்டிலேயே ஓரளவு கண்டனத்தைக் கிளப்பியிருக்கிறது. இன ஒதுக்கலின் விளைவுகளை மக்களுக்கு உணர்த்த அரசாங்கத்திற்குத் துணிச்சல் இல்லை என பார்லிமெண்டில் எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டியிருக்கிறுர். 15 நாடுகள் தென்னபிரிக்காவின் ஏற்றுமதிப் பொருட்களை பகிஷ்கரித்திருக்கின்றன. ஐ. நா. சபையில் பலவடங்களாக அது கடுந்தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. காமன்வெல்த்திலிருந்து அது வெளியேற நேர்ந்தது. இச்சமயத்தில் மற்ருேர் முக்கிய அம்சத்தையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இன ஒதுக்கல் கொள்கை பற்றி தென்னபிரிக்க ஜனதிபதி கூறிய புதிய வியாக்கியானம்தான் அது. அதாவது கறுப்பர்களை அடக்கியாள்வது தென்னபிரிக்க அரசாங்கத்தின் கொள்கையல்ல என்றும் கறுப்பர்கள் தங்கள் விவகாரங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ள விட்டு விடுவதே அரசாங்கக் கொள்கை என்றும், கூறி குழப்பியடித்திருக்கிறுர். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். உலக எதிர்ப்பு இந்த அளவுக்குத் தென்னபிரிக்காவைப் பேசவைத்ததே பெரிய காரணம். ஏதோ கறுப்பர்களுக்குச் சலுகை அளிப்பதற்கு என்னவோ நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப்படுவதாய்க் கூறப்படுகிறது. ஆயினும் அந்நாட்டின் போக்கை அறிந்தவர்கள் இவற்றில் எல்லாம் ஏமாந்துவிடமாட்டார்கள். தென்னபிரிக்கா அனுஷ்டிக்கும் இன ஒதுக்கல் கொள்கையை உலகமும் அந் நாட்டின்மீது அனுஷ்டித்து வருவதை அந்நாடு உணரவேண்டும். அதாவது தென்னபிரிக்காவை உலகநாடுகள் ஒதுக்கி வைத்திருக்கின்றன. தென்னபிரிக்கா மற்ருெரு விஷயத்தையும் உணரத் தவறிவிட்டது. தன்னைச்சுற்றிலுமுள்ள "கறுப்பு" நாடுகள் ஒன்றன்பின் ஒன்ருக விடுதலை பெற்று வருகிறதென்பதையும் அதனல் தன் கொள்கைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்பதையும் அது உணரவில்லை. இந்த உண்மையை உணராமல் கம்யூனிஸப் பூச்சாண்டியைக் காட்டி அது பயமுறுத்தி வருகிறது. அந்நாட்டின்போக்கைப் பார்க்கும்போது உண்மையிலேயே அது கம்யூனிஸப் பேய்க்குள் மாட்டிக்கொள்ளுமோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. கம்யூனிஸத்தை வளர்ப்பதற்கான அம்சங்களில் இனபேதமும் ஒன்ருய் இருப்பின் அதில் ஆச்சரியமில்லை. ஆஸ்திரேலியாவில் இருந்துவரும் நிறத்தவர் குடியேற்றத் தடையும் அமெரிக்காவின் சில பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிறத்துவேஷமும் நீங்காதவரை கம்யூனிஸப் பிரசாரத்திற்கு வழி திறந்தே இருக்கும். அந்தப் பிரசாரம் ஒடுக்கப்பட்டவர்களின் எழுச்சிக்கு தூண்டுகோலாய் இருப்பதில் வியப்பில்லையல்லவா?

## இந்தியக்குடியரசு தினம்

இந்த ஆண்டு இந்தியக் குடியரசு தினம் முன்னைய ஆண்டுகளைவிட சிறப்பாக இருந்ததற்குக்காரணம் என்னவென்று சொல்லத்தேவையில்லை. கோவா விடுதலையின் மூலம் இந்தியாவின் சுதந்திரம் பூரணத்துவமடைந்ததே அந்தக் காரணம். 1947 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குப் பின் இந்திய மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது கோவா விடுதலையைத்தவிரவேறென்றுமில்லை. சுதந்திர இந்தியா தனக்கேற்பட்ட இன்னல்களை ஒன்றன்பின் ஒன்ருக வெற்றிகரமாகத் தாண்டிவந்திருப்பது அதன் எதிர்காலம் பிரகாசமாய் இருக்கப்போகிறதென்பதையே காட்டுகிறது.

இந்தியக்குடியரசு தினத்தை இந்தியத் துருப்புக்களின் வெற்றித் தினமாகக் கணிப்பதிலும் தவறில்லை. கோவாவை விடுவித்த பெருமை ஒருபுறமிருக்க, இந்த ஆண்டு பாரதத்துருப்புக்கள் உலகின் பல பாகங்களிலும் சிறப்பான சேவை செய்து புகழ்பெற்றிருக்கிறுர்கள். ஏற்கனவே இந்தோசீன, காஸா ஆகிய இடங்களில் சமாதானபணிபுரிந்த இந்தியத் துருப்புக்கள் இப்போது சமாதானத்தை நிலைநாட்ட காங்கோவில் சண்டையிலீடுபட்டுவருகிறுர்கள். வரலாற்றுப் பெருமை வாய்ந்ததும், தீரம் மிகுந்ததுமான பாரத போர்ப்படைகள் இப்போது மீண்டும் ஒரு வெற்றியை ஈட்டியிருப்பதன் மூலம் அதன் கௌரவம் வெகுவாக உயர்ந்துள்ளது.

இவ்வாண்டு குடியரசு தினத்தில் ஏற்பட்ட ஒரே குறை நாட்டின் புகழ்பெற்ற தலைவரும், குடியரசுத் தலைவருமான ஜனதிபதி ராஜேந்திர பிரஸாத் வைபவத்தில் பங்குபற்ருததே. அவரது உடல்நலம் கெட்டிருப்பதே இதற்குக் காரணம்.

## மனமாற்றம்

மேற்கு நியூகினி விஷயமாக ஆஸ்திரேலியா தனது முன்னைய கொள்கைகளை மாற்றிக் கொள்வதற்கான அறிகுறி தென்படுவதாகச் சில வட்டாரங்களில் கூறப்பட்டுள்ளது. பூகோள ரீதியிலும், நிரந்தர உறவைப் பொறுத்தவரையிலும் இந்தோனேஷியாவுடன் ஆஸ்திரேலியா நட்புடனிருக்க வேண்டுமென்ற உண்மை ஆட்சியாளரின் மனதில் உதயமாகிவருவதாகத் தோன்றுகிறது. வெகுதூரத்திலுள்ள ஹாலந்தைவிட அருகிலுள்ள இந்தோனேஷியாவின் நட்பு முக்கியமல்லவா? அத்துடன் ஆசிய ஆபிரிக்க நாடுகளும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இந்தோனேஷியாவின் கட்சியை ஆதரிக்கும் நிலையில், தான்மட்டும் வேறு கொள்கையைப் பின்பற்றுவது நீண்டகால அடிப்படையில் நன்மை பயக்காது என ஆஸ்திரேலியா கருதுவதாயும் தெரிகிறது. ஆயினும் இது எவ்வளவுதூரம் உண்மையாய் இருக்கும் என்பதை இப்போதே சொல்ல முடியாது.

## பிஸர்ட்டா

சமீபத்தில் பாரிஸில் நடைபெற்ற பிஸர்ட்டா தளம் பற்றிய பிரெஞ்சு-டுனிஸியு பேச்சு வார்த்தைகள் முறிந்துபோனது பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. டுனிஸிய மக்களைப் பொறுத்தவரை பிஸர்ட்டாவிலிருந்து பிரெஞ்சு படைகள் வெளியேற வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்துநிலவுகிறது. கொள்கை அளவில் அங்கிருந்து வெளியேற பிரெஞ்சுக்காரர்கள் இணங்கியபோதிலும் அதற்கான காலக்கெடுவை நிர்மாணிக்க அவர்கள் தயாராய் இல்லை. சம்பாஷணை முறிவுக்கு இதுவே காரணம். மேலும் டுனிஸியாவைப் பொறுத்தவரை பிரெஞ்சு உதவி அதற்குத் தேவைப்பட்டு வருகிறதெனலாம். பிரெஞ்சு-டுனிஸிய கெடுபிடிப் போரும் ஆதலால் ஏற்பட்ட சிறிய கைகலப்புக்களும் சேர்ந்து டுனிஸியாவிலுள்ள பிரெஞ்சுக்காரர்கள் வெளியேறும்படி நேர்ந்துவிட்டதால் பெருமளவான முதலீடுகள் நாட்டைவிட்டுச் சென்றுவிட்டன. இதனல் பொருளாதார நிலை அங்கு சரிந்திருக்கிறது. அத்துடன் ஆயிரக்கணக்கான சிவில் அதிகாரிகள் அங்கிருந்து வெளியேறியதனல் நிர்வாகத்திலும் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது. அத்துடன் பிரான்ஸை பலாத்காரமாக வெளியேற்றும் நிலையில் டுனிஸியா இல்லை. எனவே பிஸர்ட்டாவை கைவிடுவது ஜெனரல் டிகாலின் முடிவிலேயே தங்கியிருக்கிறது. ஜனதிபதி போர்கீபாவின் நிலை இதனல் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

## கிரிக்கெட்

இங்கிலாந்து (எம். ஸி. ஸி.) டன் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில்- இந்தியா வெற்றிபெற்று "ரப்பரை" அடைந்தது. இது இந்திய கிரிக்கெட் சரித்திரத்தில் ஒரு முக்கிய கட்டமாகும். இங்கிலாந்துடன் கடந்த 30 ஆண்டுகளாக இந்தியா டெஸ்டுகளில் ஈடுபட்டபோதிலும் "ரப்பரை" சுவீகரித்தது இதுவே முதல் தடவையாகும். இந்தியாவின் கிரிக்கெட்தரம் நீண்டநாட்களுக்குப் பின் உயர்ந்து வருவதையே இது பிரதிபலிக்கிறது.

இப்போது பாகிஸ்தானுடன் நடைபெற்றுவரும் போட்டிகளில் இங்கிலாந்து ஒன்றில் வெற்றிபெற்றிருப்பதும், மற்ருென்று வெற்றிதோல்வியின்றி முடிவடைந்திருப்பதும், இந்திய கிரிக்கெட்டின் தர உயர்வை நிரூபிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. (பாகிஸ்தானுடன் மற்ருெரு டெஸ்ட் பாக்கியிருக்கிறது.) கண்ட்ராக்டர் தலைமையில் வெற்றிபெற்ற இந்தியக் கோஷ்டி இம்மாசக் கடைசியில் மேற்கு இந்தியத் தீவுகளில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடச் செல்கிறது. ரசிகர்களின் ஆசி அதற்கிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கிரிக்கெட்டைப் பற்றி எழுதும்போது அஹமதாபாத்தில் நடைபெற்று முடிவடைந்த சர்வதேச ஹாக்கி விளையாட்டுப் போட்டிகளையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். அவற்றின் முடிவுகளிலிருந்து 1964-ம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டியில் பாகிஸ்தான் இந்தியாவின் வலுவான எதிரியாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அஹமதாபாத் போட்டிகளில் பாகிஸ்தான் பங்குபற்றிக்கொள்ளவில்லை. ஆயினும் சீக்கிரத்தில் இந்தோனேஷியாவில் வைத்து பாகிஸ்தானை இந்தியா சந்திக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஜெர்மனி உலக ஹாக்கியில் 3-வது ஸ்தானத்தைப் பெறக்கூடும். ஆயினும் "உலக சாம்பியன்" என்ற கௌரவத்தை மீண்டும் இந்தியா பெறுமா பெருதா என்பதை இப்போதே சொல்வது கஷ்டம் இந்தியா, ஜெர்மனியை ஒரு "பெனல்டி" கோலினல் மட்டுமே தோற்கடித்தது என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

## அங்கோலா

அங்கோலாவுக்கு சுய நிர்ணயம் அளிக்குமாறு அமெரிக்கப் பிரதிநிதி திரு. அட்லாய் ஸ்டீவன்ஸன் ஐ. நா. பொதுச் சபையில் கூறியது போர்த்துக்கலுக்கு எரிச்சலாய் இருந்திருக்கும். காலனி விஷயங்களில் அமெரிக்க கொள்கையில் கென்னடி நிர்வாகம் காட்டிவரும் முன்னேற்றத்திற்கு நிச்சயமான பலன் உண்டு.

காலனிநாடுகள், தங்கள் பிடிப்புக்கு அமெரிக்காவின் தார்மீக ஆதரவையே இதுவரை எதிர்பார்த்துவந்தன. அமெரிக்காவும் இப்போது காலப் போக்கை அனுசரித்து தன் கொள்கையில் மாறுதல் காட்டி வருவது அல்ஜீரியாவிலும், நியூகினியிலும் இதர சுதந்திரப் போராட்ட நாடுகளிலும் எதிரொலியை விளைவிக்கும். கம்யூனிஸ எதிர்ப்புக்கு அமெரிக்காவின் பணம், பிரசாரம், செல்வாக்கு, படைபலம் அனைத்தையும்விட அடிமைப்பட்ட மக்களுக்கு ஆதரவளிப்பதே சிறந்த ஆயுதம் என்பதை கென்னடி நிர்வாகம் உணர்ந்து வருகிறது என்பதில் சந்தேகமில்லை.

# வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் வெள்ளம்

கொழும்பு, வெள்ளி

கிழக்கு மாகாணத்திலும் வடமத்திய மாகாணத்திலும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளிலுள்ள குளங்களில் நீர் நிரம்பிவிட்டது. வீதிகள் பலவும் வயல்களும் நீரில் அமிழ்ந்தியுள்ளன.

கல்லோயாப் பள்ளத்தாக்கிலுள்ள சேனநாயக்கா சமுத்திரத்தின் விளிம்புக்கு மூன்றடி தண்ணீர் குறைவாகவுள்ளது.

கல்லோயாப் பள்ளத்தாக்கில் பயிர்கள் தண்ணீருள் மூழ்கிப்போகக் கூடிய ஆபத்து பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கல்முனைப் பகுதியில் சென்ற ஐந்து தினங்களாக விடாது பெய்துவரும் மழை அம்பாரையில் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தியுள்ளது. அம்பாரைப் பகுதியில் நெல்வயல்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. விவசாயவேலைகள் தடைபட்டுள்ளன. தாம்போதிகளில் வெள்ளம் பாய்ந்துகொண்டிருக்கிறது. மட்டக்களப்பு-கல்முனை நேரடி பஸ் போக்கு வரத்து தடைபட்டுள்ளது.

## அஷ்டகிரக நிவாரண வழிபாடு

தெல்லிப்பழை, வெள்ளி

கலியுகவரதனை சுப்பிரமணியப்பெருமான் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி தல தீர்த்த விசேடங்களைக் கொண்ட மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவிலில் அஷ்டகிரகக் கூட்டால் ஏற்படவிருக்கும் இன்னல்களைத் தவிர்ப்பதற்கு சுப்பிரமணிய யாகமும் நவக்கிரக ஹோமமும் அடுத்தமாதம் மூன்றும் திகதி ஆரம்பித்து ஐந்தாம் திகதி முடிவுறும். மகோதய புண்ணிய கால தீர்த்தத்திற்கு வள்ளி தெய்வானை சமேதசுப்பிரமணியப் பெருமான் கீரிமலை நகுலேஸ்வர சமுத்திரத்திற்கு ஞாயிறு நள்ளிரவு புறப்பட்டுச் செல்வார்.

இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிவகாமிஅம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குத் தற்போது விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்து வருகின்றன.

## குடியரசு வைபவங்கள்

புதுடில்லி, ஜன. 27

இந்தியக் குடியரசு தினத்தில் நாடெங்கும் ராணுவ அணிவகுப்புகளும், கலாச்சார பவனிகளும், தீபாலங்காரங்களும், வாணவேடிக்கைகளும் நடைபெற்றன. நாடெங்கும் பல புதிய திட்டங்களும் தொடக்கிவைக்கப்பட்டன. ராஜ்யத் தலைநகர்களில் கவர்னர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றனர்.

பம்பாயில் 5 லட்சம் மக்கள் அணிவகுப்பில் பங்குபற்றினர்.

கராச்சி, லண்டன் ஆகிய இடங்களிலும் வைபவங்கள் நடைபெற்றன. அமெரிக்கா, யூகோஸலேவியா, எகிப்து, தாய்லாந்து, பாகிஸ்தான், பர்மா, ஜப்பான், மலாயா, சிங்கப்பூர், நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்தன.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் நடத்திய வரவேற்பு வைபவத்தில் கவர்னர் ஜெனரல் சர் ஒலிவர் குணதிலகா, பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாதர் கைப்பணி நிலைய அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை பொது ஜன சேவைச் சங்க மாதர் கைப்பணி நிலைய அங்குரார்ப்பணக் கூட்டம் சமீபத்தில் வழக்கறிஞர் திரு. ஆ. தனபாலசிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஸ்ரீமதி ஜி. எம். செல்லத்துரை கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

காரியதரிசி திரு. த. இராசரத்தினம் தமது அறிக்கையில் இப்பொதுஜன சேவைச் சங்கம் நல்லூரில் ஓர் திருநீற்றுத் தொழிற்சாலையையும், ஓர்மாதர்சங்கத்தையும், கச்சேரியடியில் ஓர் இலவச வைத்திய சாலையையும், ஆனைப்பந்தியில் ஓர் உடற்பயிற்சிக் கழகத்தையும், ஓர் இசைக்கலை நாடக சபையையும், நல்லூரில் ஓர் தொண்டர்படைநிலையத்தையும் ஓர் தேவஸ்தான தொண்டர் படையையும், ஓர் சமயப் பிரசார சபையையும் நடாத்தி வருகின்றதென்றும் இவற்றுடன் இக்கைப்பணி நிலையத்தையும் அங்குரார்ப்பணம் செய்யப் படுகின்றதென்றும், இதிற் கைப்பணி பயிலும் மாணவிகளை ஆசிரியைகளாக்கி ஒவ்வோர் வட்டாரங்களிலும் இதன் கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தி அன்னார்க்கு வேதனம் வழங்கப் படுமென்றும் குறிப்பிட்டார்.

பின்னர் ஆசிரியைகளின் கைப்பணிப் பொருட்களை யாவரும் பார்வையிட்டனர்.

அடுத்து திரு. வி. யோ. மனுவேற்பிள்ளையின் சொற்பொழிவுடனும் போஷகரின் நன்றியுரையுடனும் விழா இனிது நிறைவேறிற்று.

## 'ஸ்ரீ' பற்றி . . .

1ம். பக்கத் தொடர்ச்சி

சியமளித்தார்.

### "ஸ்ரீ" எழுத்தின் உபயோகம்

திரு. பாலசுந்தரக்குருக்கள் தமது சாட்சியத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

அழகு, ஞானம், சுபீட்சம், செல்வம், ராஜாங்க கௌரவம் ஆகியவைகளைக்குறிப்பது 'ஸ்ரீ'.

தெய்வம், பரிசுத்தம், ஆசிரியர், குரவர்கள், புனித மலைகள், நகரங்கள் ஆகியவைகளின் பெயர்களுக்கு முன்பாக 'ஸ்ரீ' எழுத்து உபயோகிக்கப்படுவது வழக்கம்.

'ஸ்ரீ' எழுத்து சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியது. தேவநாகரி லிபியில் அதற்கு ஒரு எழுத்துஉண்டு. இரண்டு அடையாளங்களை இந்த எழுத்து அதில் அழுத்தமாக எடுத்துக் காட்டியுள்ளது.

### ஒரே கருத்து ஒரே ஒலி வடிவம்

சமஸ்கிருதம், தமிழ், பாளி அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எந்த மொழியிலும் 'ஸ்ரீ' என்பது ஒரே கருத்தையே வெளியிடுவதாகும். இவற்றில் எந்த மொழியில் 'ஸ்ரீ' எழுத்தை எழுதினாலும் அதன் உச்சரிப்பு ஒலியில் எந்த வித வேறுபாடும் இருக்காது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ரஞ்சித் அபயசூரியாவின் குறுக்கு விசாரணைக்கு திரு. பாலசுந்தரக் குருக்கள் பதிலளிக்கையில் கலைப்பட்டப் படிப்புக்கு பாளி படித்ததாகவும் பாளியில் மாணவர்களுக்கு கல்வி போதனை அளித்ததாகவும், கூறினார். "பாளிக்கு சொந்தமாக எழுத்து இல்லை. ரோமன் எழுத்தில்தான் பாளி இலக்கியம் உள்ளது. புத்தபிரானின்போதனைகளை நான்பாளியில் படித்திருக்கிறேன்" என்று பாலசுந்தரக் குருக்கள் கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது:-

### சிங்களத்தில் படிக்கவில்லை

புத்தபிரானின் போதனைகள் இப்பொழுது சிங்களத்தில் இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் அவற்றை நான் சிங்களத்தில் படிக்கவில்லை. சிங்கள எழுத்தின் உருவாக்கம் பற்றி படிப்பதற்கு நான் உத்தேசித்திருந்தேன். ஆனால் மொழிப் பிரச்சினை இருக்கும்வரை அதை செய்ய விரும்பவில்லை.

திரு எம். திருச்செல்வத்தினால் மீண்டும் விசாரணைசெய்யப்பட்டபொழுது திரு. பாலசுந்தரக் குருக்கள் பின்வருமாறு கூறினார்.

நாட்டில் இந்தப் பகுதியில் கிரந்தஎழுத்து(தமிழ்'ஸ்ரீ என்று அழைக்கப்படுவது எல்லோராலும் அடையாளம் கண்டுகொள்ளமுடியும். குறிப்பிட்ட ஒருவாகனத்தை அடையாளம் காண்பதில் எவ்வித வித்தியாசமும் இருக்கமாட்டாது.

### சிங்களத்தில் 'ஸ்ரீ' இல்லை

எதிரிதரப்பின் மற்றொரு சாட்சியான நீர்கொழும்பைச் சேர்ந்த பல்கலைப் பயிற்சிநிலைய மாணவனான திரு. டபிள்யூ. டி. பி. பெர்னண்டோ சாட்சியமளிக்கையில் சிங்களமொழியில் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் தான் சித்தியெய்தியதாகத் தெரிவித்தார்.

சிங்களத்தில் "சிறி" என்ற எழுத்து இல்லையென்றும் தெரி மோட்டார் இலக்கத் தகட்டிலுள்ள "சிறி" ஒருஎழுத்துஎன்றும் இரண்டு அடையாளங்கள் ஒன்ருக இணைக்கப்பட்டதென்றும் அவர் கூறினார். சிங்கள அகரவரிசை ஏடுஒன்றுகாட்டப்பட்டபொழுது சிங்களத்தில் 59 எழுத்துக்களிருப்பதாகவும், ஆனால் 54 எழுத்துக்கள் தான் புழக்கத்திலிருப்பதாகவும் கூறினார்.

'சிறி' என்ற எழுத்து சிங்களத்தில் இல்லையென்றும் இரண்டு அடையாளங்கள் ஒன்ருக இணைக்கப்பட்டது தான் அது என்றும் சாட்சி தெரிவித்தார்.

சாட்சிபெர்னன்டோவை முடிக்குரிய வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தார்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் அடுத்த மாதம் 17ந் திகதி தங்கள் தொகுப்புரையை நிகழ்த்த ஆரம்பிப்பார்.

இதே குற்றச் சாட்டின்மேல் வழக்குத் தொடரப்பட்டுள்ள திரு. ஈ. மகாதேவன், வி. சின்னப்பு, ஏ. சகாதேவன், எஸ். ஞானசுந்தரம், கே. நடராஜா, டி. துரைசாமி ஆகியோரும் அடுத்த மாதம் 17ந் திகதி கோர்ட்டில் சமூகமாயிருக்கும்படி உத்தரவிடப்பட்டது.

# அடுத்த 3 வாரங்களில் 35,000 பிரயாணிகள் வருவர்

## 20 கப்பல்கள் அவர்களை ஏற்றி வருகின்றன

கொழும்பு, வெள்ளி

வருகிற மூன்று வாரங்களுக்கிடையில் சுமார் 35,000 பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் 20 கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து சேரும் எனத் தெரிகிறது.

இதுவரை ஒருபோதும் இவ்வளவு தொகையான பிரயாணிகளுடன் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு ஒரே சமயத்தில் வந்ததில்லை எனத் துறைமுக அதிகாரியொருவர் தெரிவித்தார். குறித்த 20 கப்பல்களில் 13 மேற்கு நாடுகளை நோக்கிச் செல்பவை. ஏனைய ஏழும் கிழக்கை நோக்கிச் செல்கின்றன.

கடந்த மே மாதம் முதல் கொழும்புத் துறைமுகத்தில் பிரயாணிகள் கப்பல் எதுவும் வரவில்லையென அந்த அதிகாரி மேலும் கூறினர். ஏனைய கப்பல்கள் வாரமொன்றுக்கு சராசரி இரண்டு வீதம் கடந்த எட்டு மாத காலத்தில் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளன எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

### காணிகள் விற்பனைக்கு

ஆனைக்கோட்டையிலும், புங்குடுதீவு, ஒன்பதாம், பத்தாம், வட்டாரங்களிலும் பத்துக் காணிகள் விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு மனுச் செய்க. செல்லத்துரை, 271, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### கல்வி

தமிழ் மொழி மூலம் தபாலில் ஆங்கிலம், எழுத, வாசிக்க பேச, ஆறுமாதங்களில் கற்பிக்கப்படும் அத்துடன் ஜி. சி. ஈ. வகுப்பு (கலை-விஞ்ஞானம்) க்குரிய பாடங்களும் தபால் மூலம் கற்பிக்கப்படும் விபரங்களுக்கு 10 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும் அதிபர் இன்ரநாசனல் இன்ஸரியூட் 513. கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்.

## 6 நாள் வேட்டைக்கு பின்னர் பிடிபட்டார்

அனுராதபுரம், வெள்ளி.

டங்கொல்லாவ என்ற இடத்தில் நடைபெற்ற மூவர்கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் ஒருவரை, ஆறு நாள் தேடுதலுக்குப் பின்னர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாகோ, விலாவ என்ற இடத்தைச் சேர்ந்த நம்பண்டா என்ற அந்த நபர் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து 30 மைல் தூரத்துக்கப்பாலுள்ள காட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த சமயம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

நம்பண்டா ஜனவரி மாதம் 29-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


# மகரத்தில் கிரகங்கள் – மக்கள் வாழ்வில் என்ன ?

மகர இராசியில் எட்டுக் கிரகங்கள் ஒன்றுகூடுவதால் உங்களது வாழ்விலே நடப்பவற்றை நீங்கள் தெளிவாக அறிய உரைக்கும் நூல் யாழ்ப்பாணத்து வாக்கிய பஞ்சாங்கப்படி,

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதியது.

விரிவாகவும் தர்க்கரீதியாகவும்

1962 முதல் பின் பல்லாண்டுகளுக்குரிய பலன்களை படித்தறிக.

தனிப்பிரதி: விலை ரு. 1-00

விபரங்களுக்கு:

பூபாலசிங்கம் புத்தகசாலை

21, பெரியகடை, யாழ்ப்பாணம்.



வீடுகளுக்கு அழகைக் கொடுக்கக் கூடிய பல வர்ண டிசைன்களுடைய திரைச் சீலைகள் வேலைப்பாடுடைய படுக்கை விரிப்புகள் போன்ற நவநாகரிக பிடவைகளுக்கு

# "ஹான்ட்லூம்ஸ்"

HANDLOOMS Indian Government

| தலைமை ஸ்தாபனம்: | இந்திய அரசாங்கம் | கிளை ஸ்தாபனம்: |
| --- | --- | --- |
| நெ. 7, செட்டியார் தெரு, | 47, மெயின் வீதி, | நெ. 69, கொழும்புத் தெரு, |
| கொழும்பு. | (பறங்கித் தெரு) | கண்டி. |
| | யாழ்ப்பாணம். | |

WA\HMS4

## இறைவன் படைப்பில்: 2

# மனிதனும் மனிதனும்

—சீதா மல்லிகா—

பட்டினப் பக்கம். கடைவீதி. கடைவாயில் ஒன்று அரை குறையாகத் திறந்திருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை விடியற் காலை. கடைக்கு வெளிப்புறத்தில் ரோட்டுக்கரையோரமாக ஒரு பிரமாண்டமான கார். அது ஜவுளிக்கடை வெளியில் நின்றது. கடைக்காரரின் கார். மூவாயிரத்து ஐந்நூறு, மூவாயிரத்து எண்ணூறு, நாலாயிரத்துஅறுபது... கடைக்குள்ளிருந்து முணுமுணுச் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. கடை முதலாளி கணக்குப் பார்ப்பதற்கு வந்திருந்தார். பிரமாண்டமான அவரது கார் வெளியில் காத்துநின்றது.

அதே தெருவீதி. அதே கடைப்புறம். வாசலுக்கு அப்புறமாக ஒருத்தன் நீட்டி முடக்கி படுத்திருந்தான். அரையில் ஒரு பழம் கிழிசல். படியக்கூடிய அளவிற்கு அதில் அழுக்குப் படிந்திருந்தது. ஒருவாறு மானத்தை மறைக்க மட்டும் தான் கிழிசல் போதுமானதாகவிருந்தது. ஐம்பது வயதுக்குமேல் மதிக்க முடியாது. ஆனால் நாற்பது வயது தான். உண்மையோ? ஒட்டி உலர்ந்து, குழிவிழுந்து காணப்பட்ட முகம், சவரம் செய்யப்பட்டிருக்கவில்லை. கிழவன். தெருப்புறத்தில் படுத்திருந்தான். அவனைக் கிழவன் என்று தான் கூறமுடியும். அரையிலிருந்த கிழிசலையும் தலைமாட்டில் கிடந்த துண்டையும் விட, அவனிடம் வேறு எதுவும் கிடையாது. காலை 7 மணியாகியிருந்தும் நன்கு தூங்கிக்கொண்டிருந்தான். தலைமாட்டிலிருந்த துண்டில் ஏதோ முடிந்து வைத்திருந்தான். முடிச்சில் பணம் எதுவும் இருக்கவில்லை. காய்ந்து உலர்ந்த சிறிது உணவைத் தான் முடிந்து வைத்திருந்தான். அவனுக்கு வேண்டியது உணவு ஒன்றுதான்! தெருப்புறத்தை வீடாக்கிக்கொண்டானே. கடைத்திண்ணையில் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தானே. முடிச்சில் உணவு தான் இருந்தது. வேறு என்ன அவனுக்கு வேண்டும். கடையின் உட்புறத்தில் முதலாளி கணக்குப்பார்த்துக் கொண்டிருந்தார். சாக்கடையில் ஒருவன்; சார்மனையில் ஒருவன்! இந்த இருவரையும்... ஒரே இறைவன் தானேபடைத்தான்.

அப்பப்பா இறைவன் இந்த அளவுக்குக் கொடியவனு? ஒட்டி உலர்ந்த வயிற்றுடன் ஒருவனையும், உல்லாச மாளிகையில் ஒருவனையும் வாழவிட்டானே!

மானத்தை மறைக்கவும் துணியின்றி ஒருவன் தெருவீதியில் கிடக்கின்றானே. அவனுக்கு மூன்று யார்களுக்கு அப்பாலும் அல்லாமல் குவியல் குவியலாக ஆயிரமாயிரம் யார்கணக்கில் சகலரகத்திலும் ஜவுளி அடுக்கப்பட்டுக்கிடக்கிறதே! அந்த ஜவுளிக்கடையுள் இருக்க எழும்பமுடியாத சொகுசுச் செட்டியார், பத்தாயிரம் இருபதினாயிரக்கணக்கில் வாரக்கணக்குப் பார்க்கிறார்! இதையிட்டு எவருக்கு தான் அக்கறையுண்டு. அதே வீதியில் பிரமாண்டமான காரில் வந்து இறங்கிப் பணத்தைக் கொட்டி புடவைகளை வாங்கிச் செல்லும் பணக்காரர் தொகைஎத்தனை? தெருவீதிக் கிழவனையிட்டு அவர்களுக்கென்ன அக்கறை? அக்கறைதான் எடுக்கவேண்டுமா? அவர்களைப் படைத்த இறைவன் தானே அவனையும் படைத்தான். ஆனால் இறைவன் படைத்த இரு மனிதர்களுக்கிடையா இத்தனை வித்தியாசம்...? எமது கண்களுக்கு இவர்களுக்கிடையே வித்தியாசம் இருக்கத்தான் தெரிகிறது. ஒருவன் சொகுசாக வாழ்கிறான். மற்றவன் சாக்கடையில் புரள்கிறான். ஒருவனுக்கு மதிப்புண்டு, மாண்பு உண்டு. அந்தஸ்து உண்டு, அதிகாரமுண்டு. மற்றவனுக்கு இவை எதுவுமில்லை. இறைவன் படைத்த இருபிறவிகளுக்கிடையே இத்தனை வித்தியாசம்.

இவர்களைப் படைத்த இறைவன் கொடியவனு! இவர்கள் செய்த கர்ம வினை தான் கொடிதா? அல்லது உலகம் கொடிதா? இன்றேல் மனித குலம் தான் கொடிதா? இவை எதுவும் கொடிதல்ல. ஜவுளிக் கடைக்காரன் யோக்கியமாகத் தான் வியாபாரம் நடாத்துகிறான். புடவைகளை வாங்குபவர்களிலும் தவறு எதுவுமில்லையே!

அப்படியானால் இறைவன் படைப்பில் இத்தனை வித்தியாசமேன்? இறைவன் படைப்பில் எமது கண்கள்தான் வித்தியாசம் காண்கின்றன. அவன் படைப்பில்தானே எல்லோரும் சமமாச்சே. ஜவுளிக் கடைக்காரர்தன் தாயின் மடியில் தவழ்ந்தது போலவே தெருப்புறக் கிழவனும் தவழ்ந்திருப்பான். இருவரையும் அவர்களது தாய்மார் பாலூட்டிச் சீராட்டித்தான் வளர்த்திருப்பார்கள். இறைவனின் படைப்பைப் பிளவுபடுத்த மனிதனின் படைப்பு ஒன்று காரணமாயிற்று. ஜவுளிக்கடை மனிதனுக்கும் தெருப்புற மனிதனுக்குமிடையே நாம் காணும் வித்தியாசம் மனிதன் படைப்பால் ஏற்பட்டதுதான். மனிதனை இறைவன் படைத்தான். ஆனால் பணத்தை மனிதன் தான் படைத்தான். இறைவன் படைப்பில் சமத்துவம் உண்டு. மனிதனின் படைப்பு தான் அதைப் பிளவுபடுத்துகின்றது. பணத்தில் மனிதன் கொண்ட கண்ணோக்குத்தான் வேற்றுமை பாராட்டுகின்றது சமூகத்தில் ஏற்றத்தாழ்வு, அதைப் போக்க ஒரு சாரார் முயற்சி செய்வர். அதை வளர்க்க இன்னுமொருசாரார் முயற்சி.

பணத்தைப் படைத்து,வேற்றுமை காணுதிருக்கும்படி உணர்த்தும் நோக்கத்தால் போலும் இறைவனும் தொழிலாளகைப் பிட்டுக்கு மண் சுமந்தான். ஆம், அந்தக் கடைப்புறத்தில் படுத்திருந்த மனிதனது முடிச்சில் பிட்டு மட்டும் இருந்திருந்தால்...! (பிட்டாக இருந்திருக்கலாம்) அம்மனிதன் சிவன் வேடமல்லவா போட்டிருந்தார். இறைவன் ஏழைவேடம் போட்டிருந்தாரே. நாம்மட்டும் ஏன் ஏழை பணக்கார வித்தியாசம் பாராட்டவேண்டும் பணத்தில் நாம் வைக்கும் கண்ணோக்குத்தான் எம்மைப் பாராட்டவும் வைக்கிறது. பரிதாபப் படவும் வைக்கிறது. இறைவன் படைப்பில் ஜவுளிக் கடைக்காரரும் மனிதன்தான். தெருப்புறக் கிழவரும் மனிதன் தான்!

# சாரதியில்லாத புகையிரதங்கள்! வேறுஎங்கும் இல்லாத அதிசயம்

**சாரதிகளோ, காப்பாளர்களோ இன்றி லண்டன் சுரங்கப்பாதைகளினூடே அமைந்துள்ள தண்டவாளங்களில் மணித்தியாலத்துக்கு சுமார் 3. மைல் வேகத்தில் பிரயாணம் செய்யும் தபால் வண்டிகள் பற்றிய ஒரு சுவையான கட்டுரை.**

சந்தடி மிக்க லண்டன் நகர வீதிகளுக்கு 70 அடிக்குக்கீழே உலகத்திலேயே மிகவும் அசாதாரணமான ஒரு புகையிரத சேவை நடைபெறுகிறது. ஒன்று அல்லது இரண்டுபெட்டிகளை மாத்திரம் கொண்ட இந்த வண்டிகளில் பிரயாணிகள் செல்வதில்லை. நீங்கள் எப்படி உற்றுப் பார்த்தாலும் இவ்வண்டிகளின் சாரதிகளை உங்களால் காணமுடியாது. இவ்வண்டிகளுக்கு எவ்வித காப்பாளர்களும் கிடையாது.

நிலத்துக்குக்கீழேயே உள்ள தங்கு நிலையங்களுக்கிடையே சாரதி இல்லாத இந்த வண்டிகள் சுமார் 30 மைல் வேகத்தில் தண்டவாளங்களில் பிரயாணம் செய்கின்றனர் தங்க வேண்டிய இடங்களில் நிற்கின்றன. பின்னர் புறப்பட்டுச் செல்கின்றன.

லண்டன் தபாற்கந்தோரின் சொந்த சுரங்கப் போக்குவரத்து ஒழுங்கைச்சேர்ந்தவை இந்த வண்டிகள். மணித்தியாலம் ஒன்றுக்கு இந்த வண்டிகளில் 40 க்கு மேற்பட்டவை சுரங்க தங்குநிலையங்களுக்கூடாகச்செல்கின்றன. தினந்தோறும் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட தபால் சாக்குகளை வெவ்வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்ல இவை உதவுகின்றன. சென்ற கிறிஸ்மஸ் பண்டிகையின் போதெல்லாம் வழக்கத்தை விட நான்கு மடங்கு அதிக தபால்களும் தபால் பொட்டணங்களும் பட்டுவாடா செய்யப்பட்டன. நிரந்தரமான தபாற்கந்தோர் ஊழியர்களைவிட தற்காலிகமாக எத்தனையோ பேர் வேலைக்கமர்த்தப் பட்டனர். இந்த நெருக்கடியை யெல்லாம சமாளிக்க இந்த சின்ன வண்டிகள் எவ்வளவோ உதவின. படிங்ரன், லிவர்பூல் தெரு ஆகிய இரண்டு பிரதான புகையிரத நிலையங்களுக்கும் 6 பிற தபால் தரப்படுத்தும் கந்தோர்களுக்கும் இவை தபால்களை ஏற்றிச்செல்ல உதவுகின்றன.

### உலகத்திலேயே இது ஒன்றுதான்

லண்டனில் இந்த விதமான வண்டிகளின் சேவை 34 ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்ட போதும், இதுவரை உலகில் உள்ள சாரதியில்லாத சுரங்க தபால் வண்டிச் சேவை இது ஒன்றுதான். இதற்கான தங்கு நிலையங்களும், இறங்கு தளங்களும் லண்டன் போக்குவரத்து நிர்வாகத்தினரின் சுரங்க பிரயாண சேவையின் மாதிரியிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. மின்சார சக்தியால் இயங்கும் இந்த வண்டிகள் ஐந்து நிலையங்களில் உள்ள விசைப்பொறிகளால் தேவைக்கேற்றவாறு கட்டுப்படுத்தப் படுகின்றன.

### வண்டிகளை நிறுத்தும் தடை விசை

இவ்வண்டிகளை வேண்டிய நேரத்தில் நிறுத்துவதற்கு உபயோகப்படும் தடை விசைகள் இலகுவான முறையில் அமைக்கப்பட்டுள்ள போதிலும் நூதனமானவையென்றே கூறவேண்டும். மின்சார காந்த சக்தியால் இயங்கும் இந்த விசைகள் சாதாரணமாக வண்டியை நிறுத்தும் நிலையிலேயே பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் வண்டி ஓடுகையில் இவற்றுக்கூடாக மின்சார சக்தி பாய்வதால் தடைகள் விலகி வண்டி ஓடுவது சாத்தியமாகிறது. வேண்டிய போது மின்சாரத்தை நிறுத்தியதும் தடைகள் இறுகி வண்டி நிலைக்கு வருகிறது.

### வண்டிகளில் தபாலை ஏற்றும் முறை

இவ்வண்டிகளில் தபாற் சாக்குகளையும் பார்சல்களையும் ஏற்றுவதற்கு மிகக் குறைந்த அளவிலேயே மனிதர்களது உதவி தேவைப்படுகிறது. தபால் தரப்படுத்தும் அறைகளிலிருந்து தண்டவாளத்திற்கருகேயுள்ள இறங்குதளத்திற்குக் கொண்டுசெல்வதற்கு மனிதர்களே தேவையில்லை. வாகனங்களும் உபயோகப் படுத்தப்படுவதில்லை. 'கொன்வேயர் பெல்ட்' என்றழைக்கப் படும் நகரும் நாடாக்களும் 'சூட்' எனப்படும் அனுப்பு குழாய்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. தபால் தரப்படுத்தும்அறையிலுள்ளவர்கள் தபாற் சாக்குகளைக் கட்டி இந்த நகரும் நடாக்களில் வைத்து விடுவார்கள். அவை அங்கேயிருந்து சுகமாய் அந்த நாடாவிலேயே சவாரி செய்து கொண்டுஇறங்குதளத்தைவந்தடைகின்றன. அல்லது தரப்படுத்தும் அறையிலுள்ள அனுப்பு குழாயின் வாயிலில் பார்சலைவைத்துவிட்டால் போதும். அது அப்படியே செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட காற்றின் அமுக்கத்தால் உந்தப்பட்டு நேராக இறங்குதளத்தில் வந்து விழும். இம்முறைகளால் நேரம் மிச்சமாவதுடன் அன்றாட செலவுகளும் குறைவு.

லண்டன் தபாற்கந்தோரின் சேமிப்பப் பகுதியில் இடத்தை மிச்சபடுத்துவதற்காகவும் விரைவில் தபால்களைப் பட்டுவாடாச் செய்வதற்காகவுமே 1927-ம் ஆண்டு டிசம்பர்மாதத்தில் இநத சுரங்க தபால் ரயில்கள் ஆரம்பிக்கப்பட்டன. தபாற் போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இந்த சாரதியில்லா வண்டிகள் மிகவும் உபயோகமாக இருப்பதால், சுரங்க தபால்வழியை விஸ்தரிக்க லண்டன் தபாற்கந்தோர் நிர்வாகிகள் திட்டமிட்டுவருகின்றனர்.

## மண்வளத்தைப் பேணும் ஆர்வம்

அமெரிக்காவில் மண்வளப் பாதுகாப்பு மாவட்டங்கள் 2870 உள்ளன. பண்ணை உரிமையாளர்கள் மேய்ச்சல் காட்டு உரிமையாளர்கள் ஆகியோரில் 95 சத விகிதத்தினர் அத்தகைய மாவட்டச் சங்கங்களில் உறுப்பினராக உள்ளனர். விஞ்ஞானமுறையான மண்வளப் பாதுகாப்பில் கிட்டத்தட்ட விவசாயிகள் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது என்பதை இது காட்டுகிறது. ஏக்கர் கணக்குப்படி பார்த்தால் விளைச்சல் மற நாடுகளைவிட அமெரிக்காவில் மிகவும் அதிகமாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

—

## கால்நடைகளுக்கு நைட்ரஜன் தீனி

அமெரிக்காவின் விவசாய இலாகா சர்க்கரை சுத்திகரிப்பு முறை ஒன்றைச் சோதனை செய்து பார்த்துக்கொண்டிருக்கிறது. அந்த முறைப்படி சர்க்கரையைச் சுத்திகரிக்கும் போது கிடைக்கும் துணைப் பொருள் மிகவும் அதிகமான நைட்ரஜன் கொண்டதாக உள்ளது. அது ஒரு பாகாக இருக்கிறது. கால்நடைத் தீனியில் அதைச் சேர்த்தால் நைட்ரஜன் கால்நடகளுக்குக் கிடைக்கிறது. அம்மோனியம் சேர்ந்த சில பாகுகளால் கால்நடைகளுக்குக் கேடுவிளைவதுண்டு. இந்தப் புதிய பொருள்களால் எத்தகைய கேடும் விளைவதில்லை என்று அமெரிக்க விவசாய இலாகாவின் ஆராய்ச்சி காட்டுகிறது.

—

## விரிந்து சுருங்கும் பருத்தித்துணிகள்

நீண்டு சுருங்கும் பருத்தி நூல்களையும் விரிந்து சுருங்கும் பருத்தித்துணிகளையும் உற்பத்திசெய்வதற்கு மிகவும் நன்கு உதவும் மூன்று புதிய வழிகளை அமெரிக்க விவசாய இலாகா கண்டுபிடித்துள்ளது. இத்தகைய துணிகளுக்கு இன்று கிராக்கி அதிகம். இத் தேவையை நிறைவுசெய்யவும் உலகம் எங்கும் பருத்தித்துணி உபயோகம் பெருகவும் இந்தப் புது முறைகள உதவும் என்று எதிர்பார்க்கிருர்கள். ஸ்வெட்டர்கள், பின்னல் சட்டைகள், நாற்காலிகளுக்குரிய உறைகள், மேஜோடுகள் முதலியவற்றுக்கு வேண்டிய துணிகளைத் தயாரிக்கப் பல அமெரிக்கக் கம்பெனிகள் புதிய முறைகளைக் கையாள்கின்றன.

—

## வேர் நோய் வராத புதிய புகையிலைஇனம்

வேர்முடிச்சு நோய் என்ற மிகவும் கெடுதலான நோய்க்கு எளிதில் இடங்கொடுக்காத புதுவகைப் புகையிலை இனம் ஒன்றை அமெரிக்காவில் வட கரோலின அரசாங்கக் கல்லூரியின் விவசாயப் பரிசோதனை நிலையம் கண்டுபிடித்துள்ளது. என்ஸி-95 என்பது புதிய இனத்துக்குப்பெயர்.

வேர்முடிச்சு நோய் ஒருவகைப் புழுக்களால் உண்டாகின்றது. வெவ்வேறு பயிர்களை மாறி மாறிப் பயிர்செய்தல், வேர்களை உளவினால் பிடுங்கி எறிதல் முதலிய முறைகளால் இப் புழுக்களைக் கட்டுப்படுத்துவது வழக்கம். நிலத்துக்குப் புகைமூட்டம் போடும் செலவு மிக்க முறையும் உண்டு. இனிப் புதிய புகையிலை வகையைப் பயிர்செய்தால் இந்தச் செலவு மிக்க வேலைக்குத் தேவை அதிகம் இராது. எனினும், பயிர் மாற்றம், வேர் அகற்றல் முதலிய முறைகளைக் கையாண்டால்தான் புதிய பயிரினத்தின் முழுப்பலன் கிடைக்கும் என்று இப் புகையிலையைக் கண்டுபிடித்தவர்கள் கூறுகிருர்கள்.

# மகளிர் மன்றம்

## பெண்களே கல்யாணப் பந்தலுக்கு மலரும் மணமும் ஒளியும் அளிக்க வேண்டும்

'சசி'

கல்யாண வீடு என்றால் எல்லோருக்குமே பிரியம். சிறுவர்கள் சிறுமியர்கள் தொடக்கம் வயோதிபர் வரை கலியாணவீட்டுக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள விருப்பப்படுவர். பெண்களும் ஆண்களும் தமது சிறந்த உடையிலும் சிறந்த அலங்காரங்களுடனும் தோற்றமளிப்பது கல்யாண வைபவங்களிலேயாகும். இந்துக்கள் வீட்டுக் கல்யாணமென்றால் ஒரே அமைதியாக விருக்கும்.

திறமையான உடையணிந்து கல்யாண வைபவத்துக்கு அழகாகச் செல்லவேண்டியவர்கள் பிரதானமாக விவாகமான பெண்களே. சில பெண்கள் போதிய அலங்காரங்கள் செய்துகொண்டு கல்யாண வீடுகளுக்குப் போவதில்லை. கல்யாணப் பந்தலை அலங்கரிப்பதற்குப் பெண்கள் அழகாகத் தோற்றவேண்டும் அல்லவா? அப்போதுதானே கல்யாணவீட்டுக்காரரை மகிழ்விப்பதாகும். தமது கல்யாண வீட்டில் எல்லோரும் அழகு பிம்பங்களாகக் காட்சியளித்துக் கல்யாணத்துக்கே பெருமை கொடுத்தார்கள் என்று அவர்கள் மகிழ்ச்சியடைவார்களல்லவா? எனவே

கல்யாணவீடுகளுக்குச் செல்லும் பெண்கள் தம்மை நன்கு அலங்கரித்துக்கொள்ள வேண்டும். பண்பாட்டுக்கு ஒத்த அலங்காரங்கள் செய்து கொள்வதனாலேயே கல்யாணப்பந்தலைப் பெண்கள் அழகு படுத்தலாம்.

மணமான பெண்கள் கல்யாண வீட்டுக்குச் செல்லும் போது ஜரிகை போட்ட சேலைகளை கட்டிக்கொண்டால் தான் பெண்களுக்குக் கவர்ச்சியாகவிருக்கும். இந்தியப் பெண்கள் தினமுமே தமது தலைகளில் மலர்களையும்மாலைகளையும் சூட்டிக் கொள்வர். ஆனால்எமது நாட்டுப் பெண்கள் சிலர் கல்யாண வீடுகளுக்குகூட மலர் சூடாது செல்வார்கள். இங்கு மலர் இல்லாமலில்லையே? ஆனால் எமது பெண்கள் சிலர் இதில் அக்கறையெடுப்பதில்லை. தகுந்த சமயங்களில் தம்மைத்தாமே நன்றாக அலங்கரிப்பதிலும் ஒரு சந்தோஷம் இருக்கிறதல்லவா? அத்தோடு பார்க்கிறவர்களுக்கும் மகிழ்ச்சியாக விருக்கும். கல்யாண வீட்டுக்குச் செல்லும் ஒவ்வொரு பெண்ணும் தலையில் பூச் சூடிக்கொள்வது நல்லது. வயது வந்த கிழவிகளின் தலைகளில் கூடக் கலியாண சமயத்தில் மலர் இருப்பது மங்களமாக இருக்கும். அதில் நையாண்டி பண்ணிக்கொள்வதற்கு எதுவுமில்லை.

ஜரிகைப் புடவையும் கொண்டமாலையும் முக்கியம் போல இன்னுமொரு அலங்காரமும் முக்கியம். சிலபெண்கள் தம்மால் எவ்வளவு நகையாபரணங்களை அணிந்து கொள்ள முடியுமோ அவ்வளவிற்கும் அணிந்து கொண்டு தான் கல்யாண வீடுகளுக்குச் செல்வார்கள். ஆனால் அதிலும் கூட அழகுண்டு. வயது குறைவான பெண்கள் மணம் செய்தவர்களாயிருந்தாலும் காதுகளில் ஜிமிக்கிகளையும், பெரிய தோடுகளையும் மாட்டிக்கொள்வது கல்யாணப் பந்தலுக்கே அழகு கொடுப்பது போலிருக்கும். வைரக்கல் தோடுகளும் அட்டிகைகளும் கட்டாயமாகவே அணிந்து செல்லவேண்டிய நகைகளாகும். இவை தான் பெண்களின் முகங்களை அதி அழகு படுத்திக் காட்டுவன. பதக்கம் சங்கிலி எல்லா அலங்காரத்தையுமே பொலிவுறச் செய்யும் நகையாகும்.

எல்லாப் பெண்களுமே இப்படியான ஜோடனைகளோடு காட்சியளித்தால் மணப்பந்தலில் மங்கள ஒளி வீசுமல்லவா? இந்திய திருமணக் காட்சிகள் எவ்வளவு கோலாகலமாகக் காணப்படுகின்றன! பெண்களின் ஜரிகைச் சேலைகளும் ஒளிக்கும் நகைகளும் மலர் மாலைக் குவியல்களுமல்லவா கல்யாணத்தை அதிக கோலாகலப்படுத்துகின்றன. மலர்களுக்கும் ஜரிகைப் புடைவைகளுக்கும் பெண்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது. ஆனால் எல்லாப் பெண்களிடமும் எல்லா நேரங்களிலும் நகைகள் அனைத்தும் இருப்பதில்லை. கல்யாண வீடுகளுக்குச் செல்வதற்கென்றால் இரவல் நகைகளைக் கூடப்பெண்கள் அணிந்து கொள்வார்கள். வெறுமனே சென்று மணப்பந்தலின் அழகைக் குறைப்பதைவிட இரவல் நகை அணிந்து செல்வதில் கூடப் பரவாயில்லை.

# அழகு மேடை

அழகுக்கலை அற்புதக் கலை. பெண்களைப் பொறுத்த வரை அது அவசியமான கலையுங்கூட. ஒவ்வொரு பெண்ணும் தான் அழகாக இருப்பதை விரும்புகிறாள். அவ்வாறு விரும்பவும் வேண்டும். பல காரணங்களுக்காகப்பெண்கள் தம்மை அழகுபடுத்துவதுண்டு. ஆனால் ஒவ்வொரு பெண்ணும் அழகுக்காகவே தன்னை அழகு ப ணிக் கொள்ளவேண்டியது அவளின் கடமை எனலாம். ஏனென்றால், ஈசன்கூடப் பெண் பிறவியை அழகுப் பிறவியாகப் படைத்துள்ளான் அல்லவா?

நாகரிகம் மிகுந்துள்ள இந் நாட்களில், அழகு எது, அது வல்லதாது எது? என்று கூடச்சிலர் புரிந்துகொள்வதில்லை. அழகுக்கும் அலங்கோலத்துக்கும் வித்தியாசம் தெரியாத அளவிற்குச் சிலருக்குப் புத்திகெட்டுவிடுவதும் உண்டு. ஆடம்பரமும் அறியாமையும் ஒன்றுசேர்ந்து அலங்காரத்தையும் அழகையும் குட்டிச் சுவராக்கிவிடுகின்றன.

சிலர் அலங்காரமின்றியே அழகாய் இருப்பர். அலங்காரங்களைக்கொண்டு, இயற்கையான அழகையும் மிகைப்படுத்தலாம். அழகு குறைந்தவர்கள் அலங்காரங்களைக் கையாண்டு அழகாகவும் இருக்கலாம். ஆனால் அழகுள்ளவர்களைக்கூட அலங்காரங்கள் அலங்கோலமாக்கவும் கூடும். அழகுக்கலையே அற்புதக்கலையாக இருப்பதை இங்கு காண்கிறோமல்லவா? அழகின் மீது செலுத்தும் கண்ணோட்டத்திலும் அலங்காரங்களைக் கையாளும் திறமையிலுமே அழகாயிருப்பதற்கான மர்மம் தங்கியுள்ளது.

அழகையே அழகுபடுத்தும் அற்புத சாதனங்கள்பல கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்திலிருந்துவருகின்றன. அழகுசாதனங்கள் சிலவற்றுக்குப் பெண்கள் நன்றிசெலுத்தாமல் இருக்க முடியாது! அழகு எது என்று அறிந்துகொண்டு அதை எவ்வாறு அடையலாம் என்று கற்றுக்கொள்ள வேண்டியது பெண்களுக்கு முக்கியமான கலை.

வெளி அலங்காரங்கள்மட்டும் அழகுக்கு வழிவகுக்கும் சாதனங்களாகா. நமது உடலாரோக்கியத்திலும், உழைப்பிலும் ஓய்வெடுத்துக்கொள்வதிலும் கவனமாக இருக்கும் பெண்களே தமது அழகை நன்கு பாதுகாத்துக்கொள்கிறார்கள். சரீரம், சருமம், கூந்தல் ஆகியவற்றுக்குத் தேவையான உணவுகளை அவற்றுக்கு வழங்கவேண்டும். அழகாயிருப்பதற்கான சில பயன்மிக்க குறிப்புகளைப் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் 'ஜரீன் ரஞ்சிதம்' இந்தக்களத்தில் தருவார் படித்துப் பயனடையுங்கள். கண்களை அழகுபடுத்துவது பற்றி 'ஜரீன் ரஞ்சிதத்'தின் குறிப்புகள் அடுத்த வாரம் அழகுமேடையில் வெளியாகும்

## தவறு ஜாக்கிரதை!

"தவறு செய்த போதுதான் குறையும் கேட்க வேண்டும். பெண்களின் சிறு தவறுகளும் பிரமாதப் படுத்தப்படுவதுண்டு. பெண்களே பெண்களின் தவறுகளைப் பிரமாதப்படுத்தி விடுவார்கள். ஆகையால் பெண்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தவறுகளை ஒத்துக்கொள்ளும் தைரியமும் அவற்றை விரைவில் திருத்திக்கொள்வதற்கான தைரியமும் முக்கியமான அம்சங்கள்".

## என்ன செய்யலாம்?

"கௌரி"

குடிபோதையில் வீடு திரும்பும் கணவனை என்ன செய்யலாம்? குண்டூசி விழுங்கி விட்ட குழந்தைக்கு என்ன செய்யலாம்? காய்கறி கிடைக்காவிட்டால் கறிசமைக்கஎன்ன செய்யலாம்? இவைகள் குடும்பப் பெண்களுக்கு நித்திய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள். இப்படிப்பட்ட பிரச்சினைகளை எப்படியோ பெண்கள் தான் சமாளித்துத் தீரவேண்டும்.

குழந்தைகளைப் பற்றி எந்த நேரமும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் என்பது தாய்மார்களுக்குத் தெரியும். அதுவும் கையில் அகப்பட்டதையெல்லாம் பொறுக்கி வாயில் வைக்கும் வயதில், குழந்தைகளையிட்டு அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எத்தனை ஜாக்கிரதையாக இருந்தால் கூடக் குழந்தைகள் தமது குட்டிக்கரணங்களைப் போட்டே தீர்த்துவிடுவார்கள். சில சமயங்களில் தலைகுத்துக் கரணமாகவிழுந்து தமது மூக்கையும் வாயையும் உடைத்துக்கொள்வர். அகப்பட்ட பொருள் எதையும் வாய்க்குள் அடைத்து சாவகாசமாக விழுங்கியும் விடுவார்கள். குண்டுமணி கற்பூரம் எதையும் தமது மூக்குக்குள்ளோ காதுக்குள்ளோ திணித்துவிடுவார்கள். ஏன் ஒரு குழந்தை இன்னுமொரு குழந்தைக்குஇப்படியான பரிகாரம் செய்வதுமுண்டு. தமக்குத் தாமே இப்பேற்பட்டபரிகாரங்கள்செய்து கொண்டு குழந்தைகள் திக்குமுக்காடும் சமயங்களில் தாய்மார்கள் என்ன செயயலாம்? இந்த சமயங்களில் உடன் சிகிச்சை வழங்குவதற்கு ஒவ்வொரு தாய்க்கும் தெரிய வேண்டும். சில சமயங்களில் அதற்கு அப்பாலும் குழந்தைகள் தாய்மாரைக் கூட்டிச் சென்று விடுவார்கள்.

குழந்தை ஊசியை வாயில் போட்டுவிழுங்கிவிட்டால் என்ன செய்யலாம்?

ஊசி விழுங்கியதும் பாண், பால், கஞ்சி அல்லது வாழைப் பழம் போன்ற மிருதுவான உணவைக் குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். குண்டூசியாக இருந்தால் ஊசி தலைப் பக்கமாகவே குடலில்செல்லும். எனவே குண்டூசிஅதிகம் தீங்கு விளைவிப்பதில்லை. ஆனால் சில சமயங்களில் பெருங்குடல் அடியிலுள்ள 'அப்பெண்டிக்ஸில்' போய் அடைவதுமுண்டு. சட்டை ஊசியைத் திறந்த படியே குழந்தை விழுங்கிவிட்டால் பெரும் சிக்கல்கள் ஏற்படலாம். ஆனால் தையல் ஊசி பயங்கரமான சிக்கல்களை ஏற்படுத்தும்.

பொத்தான்,குண்டுமணி,புளியங்கொட்டை போன்ற பொருள்களைக்குழந்தைகள்விழுங்கி விட்டால் அவை பெரும்பாலும் இலகுவாகவே வயிற்றாலே போய்விடும். இவற்றை வெளியேற்றுவதற்கென பழம், பாண் போன்ற உணவுகளைக் கொடுக்க வேண்டியதில்லை. பேதியும் கொடுக்கவேண்டியதில்லை. விழுங்கப்பட்ட பொருள் வெளியேறியதா என்று வயிற்றாலே போகும் போது சில நாட்களுக்குப் பார்த்து நிச்சயப்படுத்திக்கொண்டால் போதும். குழந்தைக்கு வயிற்றுக்குத்தோ வாந்தியோ காணப்பட்டால் குழந்தையை டாக்டரிடம் எடுத்துச் செல்லவேண்டும்.

ஊசி விழுங்கிய குழந்தைக்குச் சொல்லப்பட்ட உணவைக் கொடுத்துவிட்டு டாக்டரிடம் அந்த உடனேயே எடுத்துச் செல்ல வேண்டும். ஊசி செல்லும் கோணங்களை அறிவதற்குப் படம்பிடித்துச் சிகிச்சை செய்யவேண்டி நேரிடுவதால் உடனேயே டாக்டரிடம் எடுத்துச் செல்வது உத்தமம்.

# ஈழப்பாட்டனின் கடிதங்கள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

உலகிலிருந்து மறைந்து விடுவீர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் துறையில் எவ்வளவுக்குயர்ந்த பெருமையும், புகழும் அடைவார்கள் என்பதைக் கண்டு மகிழும் சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடையாது. உங்களுடைய இந்த மகனுரோவென்றால் வெகு காலம் உயிர் வாழ்ந்திருக்க மாட்டார். பராயப்பட்ட மனிதனுகிய ஆரம்ப காலத்திலே இவர் இறந்து விடுவார்."

இந்தத் திடுக்கிடும் திருஷ்டாந்த செய்தியை, களிப்பும், கவலையும் கலந்த குரலில் உங்கள் முப்பாட்டனர் உங்கள் முப்பாட்டிக்குச் சொல்லிவிட்டு, சோர்வு சுணக்கமின்றி பொருத்தமும், திருத்தமுமான தொரு பெயரைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டார். ஆராய்ச்சியின் பயனுக அவர் தனது முதற்பிள்ளைக்கு 'பஞ்சலிங்கம்' என்னும் அருமையான நாமத்தை வைத்தார். அப்பெயர் இன்று எல்லாராலும் உபயோகிக்கப்படும் ஒரு சர்வ சாதாரணமான பெயராக வந்துவிட்டது.

நீங்கள் நம்பினுலும்சரி, நம்பாவிட்டாலும் சரி, அந்தச் சாதகக் குறிப்பிற்கூறிய ஒவ்வொரு எழுத்தும் முற்றிலும் சரி என்பதை பின்னர் நடந்த சம்பவங்களிலிருந்து நாம் அறிந்துகொண்டோம். பல வருடங்களாக, பஞ்சலிங்கம் இலங்கை வைத்தியக் கல்லூரியில் அதிகமான பதக்கங்கள், பரிசுகள், "ஸ்கொலஷிப்"புகள் எடுப்பதில் முதன்மையாகத் தேறி முன்னணியில் இருந்து வந்தார்.

## உயர் பதவி

நாகலிங்கம் இலங்கை சுப்ரீம் கோர்ட்டின் சிரேஷ்ட "பியூனி" நீதியரசராக உயர் பதவி பெற்றுர். சுப்றீம் கோர்ட்டு பிரதம நீதியரசருக்குப் பதிலாகவும், இலங்கையின் மகாதேசாதிபதிக்குப் (கவர்னர் ஜெனரல்) பதிலாகவும், கடமையாற்றினுர். அவரேதான் நிரந்தர பிரதம நீதியரசராகவும் நிரந்தரமானமகாதேசாதிபதியாகவும் இருந்திருக்கவேண்டியவர். அவர் ஒரு ஈழத் தமிழ் மகனுகப் பிறந்திருந்தமைதான் அப்படிவர முடியாத துர்ப்பாக்கிய நிலைமைக்குக் காரணம் ஆகும். ஆம்! கஷ்டமான காலம் இன்று ஈழத் தமிழ் மக்களை துன்புறுத்துகின்றது. இந்தக் கவலைக்குரிய நிலைமை ஈழத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது சென்ற 1955ம் ஆண்டிலிருந்தேதான் என்பது தவறல்ல. உங்களுடைய சகோதரனுக்குப் பின்னுல் எழுதவிருக்கும் எனது கடிதத்தில் இந்த விடயங்களை விபரமாக எடுத்துச் சொல்லவிருக்கின்றேன்.

நாகலிங்கத்திற்கு அடுத்த படியாக வரும் உங்கள் சொந்த அப்பாவைப்பற்றி நீங்கள் ஓரளவு அறிந்திருக்கின்றீர்கள். உங்களுடைய அப்பா பல்வேறு அம்சம் உள்ளவர். பலவேறு துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்; பகீரதப் பிரயத்தனம் நிறைந்தவர்; பாராளுமன்றத்தில் பலரையும் திக்குமுக்காடும் படி சொல்லம்புகள் தொடுக்கும் பான்மையுடையவர். பழிபாதகமில்லாத விஷ எதிர்ப்புக்குணம் வாய்ந்தவர். சமயத்திற்கேற்றவாறு காரியத்தை நிர்வகிக்கும் சக்தியுடையவர். இப்படியான குணநலமுள்ள அப்பாமாரை உங்களைப்போல ஒருசிலபேத்திமார்தான் பாராட்டும் உரிமையும், நிலைபரமுமுடையவராய் இருக்கின்றுர்கள்.

தியாகலிங்கம் தனது தொழிலாகிய சட்டத் துறையில் மகாகெட்டிக்காரன். "இராணி அப்புக்காத்து" என்னும் உயர்ந்த பட்டம் பெற்றுத் திகழும் சட்ட நிபுணர். கருணையுள்ளமும், பரந்த நோக்கமும் உடையவர். உங்கள் அப்பா அவருக்குக் கசப்பு. அப்பாவின் மனப்போக்குகளில் அவருக்கு வெறுப்புண்டு.

## இளைய அப்பா

உங்களுடைய இளைய அப்பா, அமிர்தலிங்கம் இருக்கின்றுரே—அவர் தனது உத்தியோகத் தொழில் முறையில் போதியளவுக்குக் கஷ்டப்பட்டிருக்கிறுர். அப்படிக் கஷ்ட நஷ்டங்களடையக் காரணம், அவர் உங்களுடைய அப்பாவின் சகோதரராகப் பிறந்தபடியால் ஆகும். அவர் தனது ஆரம்ப பள்ளிக்கூட நாட்களிலும், சர்வகலாசாலை வாழ்க்கையிலும் மிகவும் பிரசித்தம் அடைந்து முதன்மையாகவிருந்தார் முதன்முதலாக லண்டனிலுள்ள சர்வகலாலைக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்ற வெள்ளையரல்லாதவர் அவரே ஆவர். இலங்கை அரசாங்கத்தில் கடற்தொழில் இலாகா அதிகாரியாகக் கடமையாற்றி உரிய காலத்திற்கு முன்னர் ஓய்வு எடுத்துக் கொள்ளவும் நேர்ந்தது. தற்போது ஆபிரிக்காவில் சூடான் தேசத்து காட்டும் நகரிலுள்ள சர்வகலாசாலையில் பிரயாணிகள் சாஸ்திரத்துறைப் பேராசிரியராக இருக்கின்றுர். அவர் இன்று இலங்கையிலிருந்து இதே கடமையைச் செய்ய முடியவில்லையென்றுல், தான் பிறந்த நாட்டில் தனது திறமையைப் பாவித்துதன்னுட்டைமேலோங்கவைக்க சேவை செய்ய முடியாத நிலையிலிருக்கின்றுரென்றுல், அதுவும் கவலைக்குரிய ஒரு கதை, குழந்தாய். மீட்டுச் சொன்னுல் 1955-ம் ஆண்டின் பின்னர் சுதந்திர லங்காவில் சுதந்திரமற்ற ஈழத் தமிழ் மகனுக இருந்துவிட்ட காரணத்தால்தான் இந்நிலைமை ஏற்பட்டது என்பது முற்றிலும் உண்மை, அம்மா!

எங்களில் எல்லாச் சகோதரர்களும் "சிறந்த" பதவி அடைந்து விட்டோம். இதற்கெல்லாம் மூலகாரணகர்த்தாவாக இருந்தவர் உங்களின் முப்பாட்டியேதான். அவருக்குப் பள்ளியில் படித்த பாடவாசனை இல்லை. அவர் தனது கையொப்பத்தைக் கூடப் போடக்கூடிய அளவுக்கு படிப்பில்லாது இருந்த காரணத்தால் தனது கைப்பெருவிரல் அடையாளத்தையேபோடுவது வழக்கம். ஆனுலும் அவருக்குக் கல்வி கேள்வியறிவும் இயற்கை ஞானமும் நிறைய உண்டு. "கற்றலிற் கேட்டலே நன்று" என்ற முதுமொழிக்கு அவர் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இராமாயணமும் மகாபாரதமும் அதிலடங்கிய பகவத் கீதையும் அவருக்கு நன்கு தெரியும். உரும்பராய் கற்பகப் பிள்ளையார் கோவிலில் "படிப்பு" நடக்கும்போதெல்லாம் அவர் தவருது சமுகம் கொடுப்பார். அதாவது பல்லாண்டுகளாகப் பயிற்சி பண்ணப்பட்டு வரும் பழந்தமிழ்ப் பாரம்பரிய முறைப்படி புராணங்களை ஆலயங்களில் இனிய பாடலாகப் படித்துப் பண்ணையப் பயன் சொல்வதை, பக்தி சிரத்தையுடனிருந்து கேட்டுப் பலன் பெற்றுய்வதையே "படிப்பு" என்று நான் இங்கு குறிப்பிடுகின்றேன். உலகப் புதினங்கள் எல்லாம் அவருக்கு நன்கு தெரியும். கீரிமலை வீட்டில் தனித்திருந்து அமைதியாகச் சீவியம் செய்த அவரின் அந்திய காலத்திலும் கூட புத்தகங்களும், பத்திரிகைகளும் அவருக்கு அருகிருந்து வாசித்துக் காட்டப்படும். இன்று வரைக்கும் அவரின் கைவசமிருந்த பழந் தமிழாக்க நூல்களாகிய இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டு புத்தகங்களையும் விலையுயர்ந்த பொருள்களாகக் கருதிப் பேணி வைத்திருக்கின்றேன் இந்தப் பழம் நூல்களிலிருந்து பெற்றுணர்ந்த - படியாமற் படித்த - கல்லாமற் கேட்டறிந்த அறிவாற்றலினுல்தான் அவர் தனது மக்கள் ஐவருக்கும் உற்ற காலத்தில் உரிய உபதேசங்களை உரைத்து உயர்ந்த வழிவகைகளைக் காட்ட முடிந்தது என்பது உண்மை.

தனது மூத்த மகன் 14 வயதும் நிரம்பாத பராயத்தவனுக இருக்கும்போது அவர், புருஷனை இழந்தார். அப்போது அவரின் கடைசி மகன் ஒன்பது மாசமும் நிறையாத குழந்தையாகும். அவர் தனது சீதன ஆதனங்களையும் தேடிய தேட்டம் சம்பாத்தியங்களையும் கவனமாகக் காப்பாற்றி வைத்திருந்தார். அவற்றிலிருந்து பெறும் வரும்படிகளைத் தனது பிள்ளைகளின் கல்விக்குச் செலவு செய்தார். கடைசியாக அவர் காலஞ் சென்றபோது யாழ்ப்பாண அளவு கணக்கின்படி பெரியதோர் ஆஸ்தியை விட்டுச் சென்றுர். அவரின் சிறந்த இயற்கை ஞானத்தை அறிவுறுத்த ஒரு சில உதாரணங்களை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டும்.

## ஒரு பிரச்சினை

அவரின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான தீர்மானத்தைச் செய்ய வேண்டியதொரு சந்தர்ப்பம் ஒருமுறை ஏற்பட்டது. அதுதான் அவரின் பிள்ளைகளின் உயர்தரப் படிப்புச் சம்பந்தமானதாகும். "கொழும்பிலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ" என்பதுதான் பிரச்சினையாகும். அவரின் விருப்பப்படியெல்லாம் காணிகளைப் பராமரித்து வரும்படிகளை எடுத்து அவரிடம் ஒப்படைத்துவந்தனர், அவரின் சகோதரர்கள். அவர்களின் அபிப்பிராயம், மேற்படிப்புக்கு கொழும்புக்கு அனுப்பினுல், கைவசம் இருக்கும் பணம், பொருள் எல்லாம் வீணுன செலவுகளில் விரையம் செய்யப்பட்டுப் போனுலும் போகலாம்; அதனுல் பிற்காலத்தில் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடாத்தவேணும்; எமக்குஅத்திவாரமாக ஒன்றும் கைவசமில்லாது போகும் என்பதாகும். கறுவாக் காட்டிலே வாழும் தமிழர்களின் பிள்ளைகளிற் பலர் இவ்வாறு விழலுக்கிறைத்த நீராக தம்பணத்தை விணுக்கிய விதங்களை அவர்கள் அறிந்திருந்தார்கள். எனது தாயார் பிடிவாதம் செய்தார். "எனது பிள்ளைகளைப் படிப்பிக்கும் விடயத்தில் என் பணம், பொருள் எல்லாம் வீண் போனுலும் கவலையில்லை. அப்படிச் செய்யாமல் வேறு வழிகளில் அவமாகச் செலவு செய்வதானுல் அது எவ்வளவு தவருகும். தான் உழைப்பதும் சம்பாதிப்பதும் எல்லாம் தனது மக்களைப் படிப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்காகவே என்று எனக்குப் பல முறையும் என் புருஷன் சொல்லியிருந்தார் அல்லவா? ஆகையால் கல்வி கற்பியாது வீணுக்குவதிலும் பார்க்கக் கல்வி கற்பிப்பதனுல் செலவாகிப் போவது மேலானதாகும்" என்பதுவே எனது தாயாரின் முடிவானது.

ஐந்து பிள்ளைகள் கொழும்பிலே தங்கியிருக்கும் செலவு, படிக்கும் செலவு என்றுல் கொஞ்சம் அல்ல. அதுவும் ஒரு கைம்பெண், யாழ்ப்பாணத்து மத்திய வகுப்புத் தமிழ்க் குடும்பம் என்றுல் தாங்க முடியாத பெரிய செலவுதான்.

ஆனுல் வெகுவிரைவில் செலவின் ஒரு பகுதி மக்களுக்குக் கிடைத்த படிப்புத் திறமைக்குரிய பரிசுப் பணத்திலுைம் "ஸ்கொலர்ஷிப்" ஆகியவற்றுலும் பூர்த்தி செய்யப்பட்டது. சாஸ்திரியாருடைய சாதகக் குறிப்புகள் சரியென்பது நிரூபணமாக ஆரம்பித்துவிட்டது.

அவரின் இயற்கை ஞானத்திற்கு இங்கு இன்னுமோர் உதாரணம் சொல்லுகிறேன். உங்களுடைய அப்பாவின் இளமை உற்சாகமான காலம். இங்கிலாந்தில் கல்வி கற்றுத் திறமையோடு சித்தியெய்தி, இலங்கை சிவில் சேவையில் அனுகூலப்பட்டு தாயகம்திரும்பியிருந்த நேரம், இப்படியான ஒரு இலட்சணம் பொருந்திய ஒரு வாலிபருக்கு, இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மிகவும் பணம் படைத்த தமிழ்க் குடும்பங்களிலுள்ள பெண்மணிகளுக்கு ஏராளமான சீதனத்தோடு கலியாணப் பேச்சுகள் அதிகம் வந்திருக்கும் என்பதைப்பற்றி நான் விபரிக்கத் தேவையில்லை. "அந்தப் பணக் குவியல்களையெல்லாம் இந்தக் குப்பைக் குவியலில் போட்டுவிடு. பணம் மாத்திரம் இந்த உலகத்தில் இன்பத்தைத் தராது. உனது உள்ளத்திற்கு ஏற்ற குணநடையுடைய ஒரு பெண்ணை உன் வாழ்க்கைத் துணைவியாகத் தெரிந்து எடுத்துக் கொள். அவள் உனது சாதிமரபுக்கும் தராதரத்துக்கும் ஏற்றவளாக முக்கியமாக இல்வாழ்க்கையில் இசைந்து வாழ்பவளாக இருந்தால் அதுவே 'பெறற்கரிய பெருஞ் செல்வம்' என்னுேடு கலந்து முதல் ஆலோசனை நடத்தாமல் எந்த வகையான கலியாணப் பேச்சுகளுக்கும் சம்மதம் கொடுத்துப் பிடிபட்டுப் போகாதேயடா" இவ்வாறு புத்தி கூறியவர் உங்களது முப்பாட்டி. அதே புத்தியை நான் திரும்பவும் உங்கள் தகப்பனுருக்கும் சித்தப்பாவுக்கும் மாமியாருக்கும் கூறியுள்ளேன். உங்களுடைய பராய காலம் வரும்போது நீங்களும் இந்தப் புத்தியை ஏற்று நடந்து கொள்வீர்கள் என்பது எனது நம்பிக்கை.

## முப்பாட்டியின் கெட்டித்தனம்

மீட்டும் ஒரு முறை உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன்- உங்கடைய அப்பாவும் மூத்தப்பாமார், இளையப்பாமார் எல்லோரும் எந்த உயர்ந்த பதவியில் அறிவாற்றலால் நிறைந்திருந்தார்களோ அல்லது நிறைந்தவர்களாய் இருந்து கொண்டிருக்கின்றுர்களோ எல்லாம் உங்களது முப்பாட்டியின் கெட்டித்தனத்தாலும் விவேகத்தினுலும் அன்றி வேறல்ல. அவர் கல்லூரி சென்று படித்துப்பட்டம் பெருதுவிடினும், கேள்யறிவிலான கல்வி நிறைந்திருந்தமைக்குக் காரணம்—

மகாபாரதத்தையும் பகவத் கீதையையும் இராமாயணத்தையும் அவர் நன்கு கேட்டறிந்து, அநுபவ வாயிலாக அவற்றின் அறிவுக் கடலில் தோய்ந்திருந்தமையே தான். அவர் மிகவும் பணிவும், பக்தியும், சமய அனுட்டானங்களும் உடைய தாயாக இருந்தார். அவரின் வாழ்க்கையும் சிந்தனையும் வளம்பெற்றுயர உறுதுணையாய் இருந்த சாதனங்கள், தமிழ் நாயன்மார் பாடியருளிய தேவார திருவாசகங்களும் திருப்புகழ் முதலாய மற்றும் திருப்பாடல்களுமேயாகும். உயர்ந்த தலமாகிய நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் ஒழுங்காகவும், கிரமமாகவும் சென்று வணங்குவார்.

குழந்தாய், நான் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் வாழ்நாளில் உங்கள் முப்பாட்

(11ம் பக்கம் பார்க்க)

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே !
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது'

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது !

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினிய இன்டஸ்ரீஸ் லிமிட்
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J. D

அந்தக் காலத்தில், யாழ்ப்பாணத்திற்கு முதன் முதலாகப் புகையிரதம்வந்ததையும்,தங்கப் பாட்டியுட்படபலர் ஓட்டோடியும் சென்று வேடிக்கை பார்த்ததையும் பற்றி, தங்கப் பாட்டியே சொல்லும் கதையை அடுத்த வாரம் படித்து மகிழுங்கள்.

# சிறுவர் பூங்கா

தம்பி, தங்கைகள் சிறுவர் பூங்காவில் வெளியாகும் கட்டுரை, கதைகளைப் படித்து, உங்கள் கருத்துக்களைத்தெரிவிப்பதுடன் உங்கள் ஆலோசனை தெரிவித்தும், தபால் அட்டையில் சுருக்கமாக எழுதி அனுப்பினால் அவற்றை வெளியிடுவோம்.

## எது பெரிது?

— ரமணன் —

தெருவில் கேட்கும் சைக்கிள் மணி ஓசைகளையெல்லாம், காதைத் திருப்பிக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார், சின்னையாச் சட்டம்பியார். தமக்கு வரவேண்டிய கடிதத்தை தபாற்காரன் எப்பொழுது கொண்டுவந்து தருவான் என்ற ஆவலின் பிரதிபலிப்பே அது.

வெறும் கடிதத்தை அவர் எதிர்பார்க்கவில்லை. பணம் கொண்டு வரும் கடிதத்தைத்தான் எதிர்பார்த்தார். ஆம், அவர் 'மலர்' என்ற வார இதழில் எழுதிய 'எது பெரிது' என்ற சிறுகதைக்கு உரிய சன்மானம் ரூபா நாற்பதைத்தான் எதிர்பார்த்தார்.

கதையில் தான் எழுதிய சில கருத்துக்களை நினைத்து மகிழ்ந்தபடி, வாசலில் நின்று கொண்டிருந்தார் சின்னையாச் சட்டம்பியார். 'சைக்கிள் பெல்' அவரது சிந்தனையைக் கலைத்தது.

"உங்களுக்குத்தான் ரெஜிஸ்டர் தபால். இதில் ஒரு கையொப்பம் போடுங்கள்"— தபாற்காரரின் வேண்டுகோளை நிறைவேற்றிக்கொண்டு கடிதத்தைக் கையில் பெற்ற அவர், "அம்பிகா, கமலா,..." இப்படி ஏழு பெண் குழந்தைகளின் பெயர்களை வரிசையாகக் கூப்பிட்டார்.

"இங்கேயே ஒரு பாடசாலையை நடத்திவிடுவீர்கள் போலிருக்கு" என்ற அவரது மனைவியின் குரல் அவரது காதுகளில் விழுவதற்கு முன் அவரது ஏழு பெண் பிள்ளைகளின் குரல்கள் விழுந்தன.

'என்னப்பா, ஏனப்பா கூப்பிட்டீர்கள்' என ஏக காலத்தில் ஏழுபிள்ளைகளும் கேட்டார்கள்.

" 'மலர்' பத்திரிகையில் நான் எழுதியிருந்தேனே ஒரு சிறு கதை, அதுக்கு ரூபா 40 சன்மானம் மணிஓடர் அனுப்பியிருக்கிறார்கள். அது தான். உங்களிடம் சொல்லாமல் இதை யாரிடம் சொல்லிச் சந்தோஷப்படுவது என்று கூப்பிட்டேன்" —சட்டம்பியார் தமது சந்தோஷத்தைச் சொல்லி முடிக்கவில்லை ஏழு குழந்தைகளும், "அப்பா எனக்குச் சட்டை, எனக்குச் சேலை, எனக்குப் புத்தகம்,.." இப்படிக் கோரிக்கைகளை அவர் முன் சமர்ப்பித்தனர்!

அருமைக் குழந்தைகளின் ஆசைகளை நிறைவேற்ற அவரது இதயம் துடித்தது. ஆனால், அவர் இதயத்தில் மற்றொரு ஆசை! இரண்டு தினங்களுக்கு முன்னர் முகிழ்த்த ஓர் ஆசை இப்போது கொழுந்துவிட்டது.

கொழும்பில் இரு தினங்களுக்குப் பின் நடைபெறவிருக்கும் இலக்கிய விழாவில் அவரை ஒரு பேச்சாளராகப் போட்டிருந்தார்கள். அழைப்பிதழ் அவர் கண்ணுக்கு எதிரே மேசை மீது கிடந்தது. அந்த அழைப்பு இதழைப் பார்த்தார். அவரது பெயர் அழகாக அச்சிடப் பட்டிருந்தது. சிந்தனை கொழும்பை நாடிச் சென்றது. மேடையில் தாம் பேசுவதாகவும் பலர் அதை வரவேற்றுக் கரகோஷம் செய்வதாகவும் அவர் மனத்திரையில் ஒரு நினைவு ஓடியது.

பிள்ளைகளின் எதிர் காலத்துக்குத் தமது பிரபல்யம் மிக உதவியாக இருக்கும் என்பது சட்டம்பியாரின் ஒரு நம்பிக்கை. இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் பிறகு எப்போது இப்படி ஒரு சந்தர்ப்பம் வரும்?—அவருள் ஒரு கேள்வி எழுந்தது.

"கொழும்புக்குப் போகிறேன். உங்களுக்கு எல்லாம் வாங்கி வருகிறேன்" — சுருக்கமாகக் கூறிவிட்டு செருப்பை மாட்டிக்கொண்டு தபாற்கந்தோருக்குச் சென்றார் சட்டம்பியார்.

பணம் மாற்றப் போன சட்டம்பியார் வழியில் யாருடனும் பேசாது 'விறு விறு' என்று வீட்டுக்கு வந்து சேர்ந்தார். வழியில் தம்மிடம் யாராவது கடன் கேட்டு விட்டால்? பகிரங்கமாகப் பெற்ற பணமல்லவா? அதனால் தான், 'அதற்குள் வந்து விட்டீர்களா? என அவர் மனைவி கேட்குமளவுக்கு விரைவாக வீடு வந்து சேர்ந்தார் அவர்.

'வாத்தியார்!'— வாசல் பக்கத்திலிருந்து ஒரு பரிதாபகரமானகுரல்.பணம் வைத்திருந்த சட்டைப்பையைக் கையால் பொத்திக்கொண்டே 'யாரது' என்று ஒரு வித வெறுப்புக் கலந்த குரலில் கேட்டார் சட்டம்பியார். 'நான் தான் வாத்தியார், கண்ணன்; உங்களைத் தேடித்தான் வந்தேன்'— பணிவான குரலில் சட்டம்பியாரைத் தேடி வந்த சிறுவன் கண்ணன் கூறினான். "அட கண்ணனா? என்ன இங்கு வந்தாய்! என்ன சங்கதி?"

"அப்பாவுக்குக் கடுமையான சுகவீனம். டாக்டரிடம் கூட்டிக் கொண்டு செல்ல வேணும். . . பணம் கொஞ்சம்...

"எவ்வளவு, வேணும்?"

"கார்பிடித்துத்தான் கூட்டிக் கொண்டு போக வேணும். அப்பாவின் நிலை அப்படியிருக்கு. டாக்டருக்கு வேறு பணம் கொடுக்க வேணும்... ஒரு முப்பது ரூபா தந்தால்...?"

சிறு தொகை கேட்பானென்றுதான், 'எவ்வளவு வேணும்' என்ற கேள்வியை இலேசாகக் கேட்டார் சட்டம்பியார். ஆனால் விஷயம் முப்பது ரூபாய்!

வேறு யாரிடமும் கேட்டாயா?

யாரிடம் கேட்பேன். உங்களுக்குத்தான் என் நிலையை நன்கு தெரியும். அதனால்தான் உங்களிடம் வந்தேன். எனக்குத் துணை அப்பா; அப்பாவுக்குத் துணை நான்... அவன் மேலே பேச முடியாது விக்கினான்.

ஆசிரியரின் கண்களிலிருந்து இருசொட்டுக் கண்ணீர்த் துளிகள் விழுந்தன.

சட்டைப் பையைப் பொத்தியிருந்த கையை எடுத்து வாயைப் பொத்திக் கொண்டு எதையோ யோசித்தார்.

"ஊசலாடும் உயிருக்கு உதவுவதா? ஊரில் பெரிய பெயர் எடுக்க என் பணத்தைப் பயன் படுத்துவதா? எது பெரிது?"—தன்னைத்தானே கேட்டுக் கொண்டார்.

"கண்ணா"—தனது மாணவனைக் கூப்பிட்டார். அவன் தோளில் கையை வைத்துக் கொண்டே உன்னைப்பெற்ற தந்தைக்குக் கடமை செய்ய இந்தச் சின்ன வயதிலேயே துடிக்குதே உன் இதயம், அது எல்லாவற்றிலும் பெரியதடா! முப்பதல்ல இந்தா நாற்பது ரூபாவையும் கொண்டுபோ".

கண்ணன்சின்னையாச் சட்டம்பியாரை நன்றிப்பார்வை பார்த்து விட்டு ஓடினான்.

தாம் செய்த பெரிய காரியத்தை நினைத்துத் திருப்தி நிறைந்த நெஞ்சுடன் நின்று கொண்டிருந்தார் சட்டம்பியார்.

(யாவும் கற்பனை)

## பத்திரிகைக்கு எழுதும் சிறுவர்கள் படிப்பைக் குழப்பி விடுகின்றனரா?

அருமைத் தம்பிக்கு,

கடந்த வாரம் உனது கட்டுரையைப் பத்திரிகையில் படித்தேன். அது பற்றி நீ எனக்கு எழுதியிருந்த கடிதமும் படித்தேன். உனது கட்டுரையை எனது காரியாலய சகாக்களுக்கும் படித்துக் காட்டினேன். அவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

எனது காரியாலய நண்பன் சோமுவுக்கு உன்னைப்போல வேயொரு தம்பி இருக்கின்றானாம். அவன் "ஆனந்தன்" என்னும் பெயரில் எழுதுவானாம். மிக நன்றாக எழுதுவானாம். நான் ஒன்றும் படித்ததில்லை. அவனுக்கு இப்போது வயது பதினெட்டாம். அப்படியென்றால் அவன் உன்னைவிட ஐந்து வயது மூத்தவன். உனக்கு வயது பதின்மூன்று தானே?

அந்த ஆனந்தனைப்பற்றி அவன் அண்ண பேசியபோது நான் மிகவும் வேதனையடைந்தேன். ஏன் தெரியுமா? அவன் பாடசாலைக்குப் போவதில்லையாம். போகவும் மாட்டானும். பத்திரிகைக்குக் கதை எழுதி எழுதித்தான் அவன் படிப்பைக் கெடுத்துவிட்டான் என்கிறன் ஆனந்தனின் அண்ணன்.

பத்திரிகைகளில் கதை, கட்டுரைகள் எழுதுவதினல் சிறுவர்கள் படிப்பைக் குழப்பிவிடுகிறர்களா என்று நான் நண்பன சோமுவைக கேட்டேன். அவன் " ஆமாம் " என்ருன். எனக்குப் பகீரென்றது. நீயும் பத்திரிகையில் எழுதி எழுதி படிப்பைக் குழப்பிக் கெட்டுவிடுவாயோ என்று ஏங்கினேன்.

எனது நண்பன் சோமு சொல்லியதை நன்ருகச் சிந்தித்தேன். அவன் சொல்லியது ஒரு வகையில் சரிதான். அவன் ஒரு அனுபவசாலி.

இந்த எழுத்து இருக்கிறதே, இதில் சிறுவர்கள் ஈடுபட்டால், "கிறுக்காகி" விடுகிறர்கள் என்று சோமு சொல்கின்ருன். அது உண்மைதான். என்ன தெரியுமா? ஒரு தடவை ஒரு சிறுவனின் கட்டுரையோ கதையோ, கவிதையோ பத்திரிகையில் வெளி வந்து விட்டால் அவனுக்கு அதிக மகிழ்ச்சி ஏற்பட்டு, அவனை நிம்மதி இழக்கச் செய்துவிடுகிறது விஷயதானம் பத்திரிகையில் வெளியானதும் சிறுவர்களுக்கு பசியிருக்காது; உறக்கம் வராது. அத்தனை மகிழ்ச்சி! அந்த உற்சாகம் சிறுவர்களை "எழுத்துத்துறை"யில் மேலும் ஊக்குவிக்கும். தான் பத்திரிகைகளுக்கு எழுதுவதும், பிற சிறுவர்கள் எழுதுவனவற்றைப் படிப்பதும், எழுதுவதைப் பற்றியே சிந்திப்பதும், அவற்றைப் பற்றி சக சிறுவர்களுடன் அளவளாவுவதும்... இப்படியாக எழுத்தைப்பற்றியே சிந்திக்கவும் குதூகலிக்கவும் பாடசாலைப் படிப்புக் கெட்டுவிடுகின்றது.

எப்படியென்று கேட்கின்ருயா? வீட்டுப் பாடங்களைச் செய்ய முடிவதில்லை. பாடசாலையில் படித்தவற்றை நினைவில் வைத்துக்கொள்ள முடிவதில்லை. காலைப் போக்கில் ஆசிரியர் "மக்கு" பட்டம் வழங்குவார். சக மாணவர்கள் நகைப்பார்கள். பள்ளிக்கூடத்தில் வெறுப்பு ஏற்படுகின்றது. பையன் கெட்டுவிடுகின்ருன்.

இப்படித்தான் ஆனந்தனும் கெட்டானும். பாவம், அவனை டாக்டராகவோ, என்ஜினியராகவோ படிக்க வைக்க விரும்பினர்களாம். பிற்காலத்தில், படிப்பில்லாமல் அவன் எப்படி வாழப் போகின்ருனே?

அப்படியென்ருல் பத்திரிகைகளெல்லாம் ஏன் சிறுவர்களுக்கென்று பிரத்தியேகமாகப் பக்கங்கள் ஒதுக்குகின்றனவென்று நீ கேடகக்கூடும்,உண்மைதான். பத்திரிகைகள் சிறுவர்களுக்கென்று பக்கங்கள் ஒதுக்குகின்றனதான். இன்னும், சிறுவர்களுக்கென்றே நாட்டில் தனிப்பத்திரிகைகளும் வெளியாகின்றன. இவற்றில் சிறுவர்கள் எழுதுகின்ருர்கள். (சிறுவர்களுக்காகப் பெரியவர்களும் எழுதுகின்ருர்கள்.) பத்திரிகைக்கு எழுதுகின்ற சிறுவர்களெல்லாம் படிப்பைக் குழப்பி விடுவார்களா? இல்லை. பள்ளிக்கூடக் கல்வியில் அதிக அக்கறை காட்டி பத்திரிகைக்கு எழுதுவதைப் பொழுதுபோக்காகக் கொண்டு அடக்கத்துடனிருக்கும் எந்தச் சிறுவனும் கெட்டுவிடமாட்டான்.

நான் உனக்குச் சொல்வது இதுதான். ஒரு நாளிலுள்ள இருபத்துநாலு மணித்தியாலங்களில் உனது கடமைகளை வரிசைப்படுத்தி, அவற்றுக்கு இவ்வளவு நேரம் என ஒதுக்கிக்கொள். பத்திரிகை படிப்பதையும் அவற்றுக்கு எழுதுவதையும் உனது கடமைகளில் சேர்த்துக்கொள். உனது வசதிப்படி அதற்கென நேரம் ஒதுக்கிக்கொள். பள்ளிக்கூடப் பாடங்களை அதற்குரிய நேரத்திலும் விளையாடுவதை அதற்குரிய நேரத்திலும் செய். இப்படிச் செய்தால், எந்தச் சிறுவனும் கெட்டுவிடமாட்டான். பிறகால்த்தில் நீ ஓர் பிரபல எழுத்தாளனுகவும் மிளிருவாய்.

இதைத்தான் நான் எனது நண்பன் சோமுவுக்கும் சொனனேன்.

உனக்கு என் ஆசீர்வாதங்கள்.

இங்ஙனம்,
உனது அன்புள்ள அண்ண,
"சபா"

## ஒரு வார்த்தை

ஆர்வமுள்ள தம்பி, தங்கைகள் சிறுவர் பூங்காவுக்கு கதைகள், கட்டுரைகள், பெரியார் வரலாறுகள், பெரியார் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் முதலியன அனுப்பலாம்.

உங்கள் அம்மா, அப்பா அண்ணன் மற்றும் உங்கள் குடும்பத்திலுள்ள பெரியவர்களிடம், அவர்களது இளமைப் பராயத்தில் ஏற்பட்ட மறக்க முடியாத சம்பவங்களை எழுதி வாங்கி, அனுப்பி வையுங்கள்.

கதை கட்டுரைகள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் சுருக்கமாக எழுதப்பட வேண்டும்.

'ரமணன்' எழுதியுள்ள 'எது பெரிது' என்னும் கதையைப் படித்துவிட்டு, சின்னையாச் சட்டம்பியாரை, ஏன், ஆசிரியர் குலத்தையே வாழ்த்தாதிருக்க முடியாது.

தனது அருமைத் தம்பிக்கு சபா எழுதியுள்ள கடிதம் சுவையுள்ளது. எழுத்தாளத் தம்பி, தங்கைகள் படித்துப் பயனடைவார்கள் என நம்புகின்ளேம்.

சிறுவர்களுக்குப் பயன்படும் விஷயங்களைப் பெரியவர்களும் எழுதியனுப்பலாம்.

"சிறுவர் பூங்கா", ஈழநாடு, யாழ்ப்பாணம்.

## ஈழப்பாட்டனின்...:

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டியின் இந்த வழியைப் பின்பற்றி, பழந்தமிழ் மரபை நன்கு விளங்கி, தமிழ்க் கலாச்சாரத்தைப் பேணி, தமிழரின் சீரிய நாகரிகத்தைத் தழுவி, தமிழரின் தாய்மதத்தையே வழிபட்டு வாழ்வதற்கு இன்றுதொட்டே ஆர்வத்தோடு ஈடுபாடு கொள்வீர்களானல் உண்மையில், உங்களுடைய அப்பாவின் அம்மா எவ்வளவு மேன்மையான தாயாக விளங்கினரோ, அதேபோல நீங்களும் வாழ்ந்து மகிழ்வீர்கள் என்று எனது பிரார்த்தனையோடு இக்கடிதத்தை முடிக்கிறேன்.

என்றும்,
உங்களில் மிக்க அன்புள்ள,
அப்பா

# கலை அரங்கம்

## "மனதைப் பறித்தாய் எங்கே வைத்தாய்?"

### 'செங்கமலத்தீவு'க்காக பாட்டு

"மலரைப் பறித்தாய், தலையில் வைத்தாய், மனதைப் பறித்தாய் எங்கே வைத்தாய்!" என்ற பாட்டை சமீபத்தில் எம். ஏ. வி. பிக்சர்ஸ் 'செங்கமலத்தீவு'க்காகப் பதிவு செய்தார்கள்.

திருச்சி தியாகராஜன் எழுதிய இப்பாட்டை வி. பி. சீனிவாசனும்,எல். ஆர். ஈஸ்வரியும் பாடினார்கள். கே. வி. மகாதேவன் இப்படத்துக்கு இசை அமைப்பை மேற்கொண்டுள்ளார்.

எம். ஆர். ராதா, ஆனந்தன் கள்ளபார்ட் நடராஜன், ராஜ்ஸ்ரீ புஷ்மலதா, ராமதாஸ், கருணாநிதி, டி. பி. முத்துலட்சுமி ஆகியோர் நடிக்கின்றனர்.

எஸ். ராஜேந்திரன் டைரக்ட் செய்கிறார்.

## ஈ. வி. சரோஜா ரூ. 15,000 நன்கொடை

சென்னையிலுள்ள ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி நிதிக்கு நாட்டிய நடிகை ஈ. வி. சரோஜா 15,000 ரூபாய் நன்கொடை வழங்கினார்.

வைத்தியக் கல்லூரி நிதிக்காக நடிகை சரோஜாவின் நடனவிருந்து நடைபெற்றது. இதில் 15,000 ரூபாய் வசூலானது. இத்தொகை முழுவதும் வைத்தியக் கல்லூரி நிதிக்குக் கொடுக்கப்பட்டது.

**விளம்பரம்**

சுமார் 90 வயதென மதிக்கக் கூடிய ஐந்தரை அடி உயரமும் 36 அங்குல மார்பகலமும், பழைய முறைப்படி முன் தலைமயிர் வழித்து பிற் பக்கம் கிறில் வெட்டு, நரை மயிரையுமுடைய காசிநாதர் (செட்டியார்) செல்லப்பா என்பவரைச் சில நாட்களாகக் காணவில்லை. வயதிற்கு ஏற்ற மறதி உண்டு. முன் வாயில் மேலும் கீழும் மொத்தமாக 5, 6 பற்கள் இல்லை. இவரை அறிவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு ஓர் அறிவித்தல் தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

செ. இரத்தினம,
ஏழாலை வடக்கு,
சுன்னுகம்

## ராகினி நடனம்; ரூ. 80,000 வசூல்

கேரளத்திலுள்ள கள்ளிக்கோட்டையில் நடிகை ராகினி கோஷ்டியினரின் ராமாயண நாட்டிய நாடகம் நடைபெற்றது. தாகூர் நினைவு மண்டபம் கட்டுவதற்காக நடைபெற்ற இந்த நடனத்துக்கு 80,000 ரூபாய் வசூலானது.

## தயாரிப்பாளராக டைரக்டர் ரெட்டி

'மணப்பந்தல்' படத்தை டைரக்ட் செய்த வி. என். ரெட்டி 'மாதர்லன்ட் பிலிம்ஸ்' என்ற படக் கம்பெனியை ஆரம்பித்துள்ளார். அதன் முதல் தயாரிப்பில் 'மணப்பந்தல்' அசோகன், கல்யாண்குமார், நடிகவேள் எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி ஆகியோர் நடிப்பார்கள். படப்பிடிப்பு, டைரக்‌ஷனை தயாரிப்பாளர் ரெட்டியே கவனிக்கிறார்.

## பிராங் சினட்ராவுக்குத் தடை

பிரபல ஹாலிவுட் நடிகர் பிராங் சினட்ரா தான் கலந்துகொள்ளும் பொது நிகழ்ச்சிகளில் (நாடகங்கள் முதலியன) வாயை அடக்கிப் பேச வேண்டும் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார். அவரது பேச்சு அமெரிக்க ஜனாதிபதியையும், அரசாங்க நிர்வாகத்தையும் அவமதிப்பது போல அமைந்திருந்ததாகக் குற்றம்சாட்டியே மேற்படி தடை விதிக்கப்பட்டது.

## ஓவியரின் விரல்களுக்கு இன்ஷூர் வெள்ளி 30,000

விரலைக்கொண்டே சித்திரங்கள் எழுதும் ஒரு பிரபல ஓவியரான திரு.உசைன் என்பவர் தனது தொழிலுக்கு உரிய அரியபொக்கிஷமான தனது விரல்களை 30,000 வெள்ளிக்கு இன்ஷூர் செய்திருக்கிறார்.

இத்தகவலை அவரே வெளியிட்டார்.

பிரஷ்ஷினால் சித்திரம் தீட்டுவதைவிட,விரல்களால் தீட்டும் சித்திரத்துக்கு அதிக சாதகங்கள் உண்டு என்றும், இம்முறை சீனர்களால் உபயோகிக்கப்பட்டு வருகிறதென்றும் அவர் கூறினார்.

விரல்களைக்கொண்டு தீட்டப்படும் சித்திரங்களில், உயிருட்டங்களை சுலபமாகவும், திறமையாகவும் காண்பிக்க முடியும் என்றும் அவர் சொன்னார்.

ஏற்கெனவே இவர்,லண்டன் நியூயோர்க், வாஷிங்டன் சிகாகோ, சான்பிராசிஸ்கோ, ஹானலுலு போன்ற பெரிய நகரங்களில் தமது ஓவியக் காட்சிகளைக் காட்டி, பெரிதும் பாராட்டப்பட்டுள்ளார்.

## இந்தி 'கண்ணம்மா'

ஏ. வி. எம். இந்தியில் தயாரித்துவரும் "களத்தூர் கண்ணம்மா" படப்பிடிப்பு ஏ. வி. எம். ஸ்டுடியோவில் நடைபெற்றது. மீனகுமாரி நடித்தார். இதை பீம்சிங் டைரக்ட் செய்கிறார்.

## புதிய படத்தில் கல்லூரி மாணவி

"மாடப் புறாவை" தயாரித்து அடுத்த வாரம் 'பறக்கவிட' விருக்கும் பி. வி. என். புரடக்‌ஷன்ஸார் புதிதாகத் தயாரிக்கவிருக்கும் படத்தில் கல்லூரி மாணவி ஹேமா நடிப்பார். எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஆர். ராதா ஆகியோரும் இதில் நடிப்பார்கள்.

## வளைகாப்பு மீண்டும் வளர்கிறது

சிலகாலமாக நின்றுபோயிருந்த லட்சுமி பிக்சர்சாரின் "வடிவுக்கு வளைகாப்பு" மீண்டும்வளரத் தொடங்கியுள்ளது.

ஏ. கருணாநிதி, மனோரமா, டி. கே. ராமச்சந்திரன், ராஜகோபால், சுப்பையா, வி. கே. ராமசாமி ஆகியோர் கலந்துகொண்ட காட்சிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன.

சிவாஜி கணேசன், சாவித்திரி, எஸ். வரலட்சுமி ஆகியோர் முக்கிய பாகங்களில் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

## ஆணாக மாறிய பிரஞ்சு நடிகை

பாரிஸ் நடன உலகில் பிரசித்தி பெற்ற ஜேக்கஸ் சார்ள்ஸ் டுப்ரஸ்கி என்ற நடிகை இப்பொழுது ஆணாக மாறிவிட்டார். முப்பது வயதான இவர் மொராக்கோவில் ஒரு ஆப்பரேஷன் செய்துகொண்ட பிறகு ஜகுலின்சார் வட்டிடுப் எல்ஜி என்ற ஆணின் பெயர் வைத்துக்கொண்டுள்ளார்.

**3வது வெற்றி வாரம் !**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) திவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!
இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும் உத்தமியின் காவியம்!
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம. என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த


**பாசமலர்**

திரைக் கதை - டைரக்‌ஷன்: ஏ. பீம்சிங்


மனோகரா (யாழ்ப்பாணம்)

வி. நாகேஸ்வரராவ், சாவித்திரி நடித்த

**சந்தானம்**



அகில இலங்கைப் பொது ஜன சேவைச் சங்க மாதர் கைப்பணி நிலயத்திற் கடமையாற்றும் ஆசிரியைகளால் செய்யப்பட்ட கைப்பணிகளை மேற்படி விழாவிற் சமுகமதோரிற் சிலர் பார்வையிடும் பொழுது எடுக்கப்பட்ட படம்.



அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க ம பணி நிலயத்தை அதன் போஷகர் வழக்கறிஞர் ம்ரு. ஆ. தனபாலசிங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கு போது பிடிக்கப்பட்ட படம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள